REGD. M. 4642

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 21—3—48 | இதழ் 41

## கருணை!

[ மகாமதுரகவி வீ. வே. முருகேச பாகவதர். ]

கல்லடுக்கி மரத்தடியில் சுப்பல் சேர்த்து
கனல் மூட்டி கண்புகைய வடிப்பார் சோறு;
கல்லனைய மழை பொழியும்! உடல் நடுங்கிக்
கண்ணீரும் உடன்பொழியும்; கையால் சோற்றைச்
சொல்லமுடி யாத்துன்பச் சுழலாற் றுங்கி
சோர்ந்தலையும் ஏழையரைப் பார்த்தும் நெஞ்சில்
வல்ல தயை உள்ளாரைக் காணேன்! தேடி
வயற்காட்டில் விளைகிழங்கில் 'கருணை' கண்டேன்!

புசிக்க உண வில்லாதக் களைப்பி னாலே
பழுதியிலே வீழ்ந்தொருவன் பொருமிக் கண்ணீர்
கசிந்துருகித் துடிதுடிக்கக் கண்டேன்! நெஞ்சங்
கனியாதான் கைகளிலே கனியைத் தாங்கி
பசிக்காத சிலைகளுக்குப் படைக்கக் கண்டேன்!
பருகோயில் கட்டிவைக்கக் கண்டேன்! மாந்தர்
வசிப்பதற்கு மனைகட்டி வழங்கக் காணேன்!
வயற்காட்டில் விளைகிழங்கில் 'கருணை' கண்டேன்!

கூடிமக்கள் ஈக்களென மொய்க்கக் கண்டேன்!
குறையில்லாக் கலைச்செல்வங் குவியக் கண்டேன்!
தேடிவரும் பதவி பட்டம் "மோட்டார்" கண்டேன்!
தெய்வதிருப் பணிகண்டேன்! தேனினிக்க
மாடியிலே வானொலியும் முழங்கக் கண்டேன்!
மனையெதிரிற் பூம் பொழில் சூழ்வளமுங் கண்டேன்!
வாடி நொந்தோர்க் கிரங்கும் உளம் ஒன்றே காணேன்!
வயற்காட்டில் விளைகிழங்கில் 'கருணை' கண்டேன்!

16-ம் பக்கத் தொடர்ச்சி

பகல்போன்றவிளக்குகளால்பிரகாசிக்கும். இங்கிலாந்துக்கும், ஐரோப்பா கண்டத்திற்கும் மத்தியிலுள்ள இங்கிலீஷ் சானல் என்னும் கடலின் வழியே போக்குவரவுக்காகப் பாதாளப்பாதை குழாய்களைக்கொண்டு ஏற்படுத்தப்படும். இப்படியே உலகத்திலுள்ள எல்லாப் பாகங்களுக்கும் செல்லப் பாதாளப்பாதைகள் ஏற்படும்.

இன்றையதினம் கம்பியில்லாத் தந்தி எவ்வளவு சாதாரணமாகப் போய்விட்டதோ, அதைப்போல இன்னும் 50 வருடங்களுக்குள் உருத்தோற்றங்கள் மிகச் சாதாரணமாகிவிடும். (உருத்தோற்றமென்றால் நாம் இருக்கும் இடத்திலிருந்தபடியே ஆயிரம் மைலுக்கப்பாலுள்ள மனிதர்களைப் பார்க்கவும் பேசவும் ஏதுவான கருவி) வருங்காலத்தில் ரேடியோ எந்தவிதமாக அபிவிருத்தி அடையுமென்றால், இன்றையிலிருந்து 50-வருடத்தில் நம்முடைய பேரன் பேத்திமார்கள் தங்கள் ஜேபிகளில் ஆளுக்கொரு ரேடியோ செட் வைத்துக்கொண்டு தெருக்களில் நடந்தவண்ணமாகவே வெகு தூரத்திலுள்ளவர்களோடு பேசப் போகிறார்கள். அவ்வளவு முற்போக்கான காலத்தில் வசிக்கப்போகும் நம்முடைய சந்ததியார்கள், நம்முடைய அறியாமையையும், முட்டாள்தனத்தையும் பிற்போக்கையும் கண்டு எள்ளனம் செய்யப்போகிறார்கள்.

பிறகு சப்தத்தைப்பற்றியோவென்றால், வருங்காலமனிதன் சப்தமும், பேரிரைச்சலும் நுழைய முடியாத வகையில் நகரங்களைச் சிருஷ்டிக்கப் போகிறான். சப்தத்தை அடக்குவதற்காக, சல், சுண்ணாம்பு, மண், சிமிட்டி இவைகளுக்குப் பதிலாக ரப்பர் எல்லாவற்றிற்கும் கவசமாக உபயோகிக்கப்படும்.

இன்றையதினம் நம்முடைய சிந்தனையின் வேகம் 50 வருடங்களுக்கு முன்னிருந்ததைவிட அதிகரித்திருக்கிறது. இன்னும் 50 வருடங்களுக்குப் பிறகு இப்போதிருக்கும் வேகத்தைவிட ஆயிரமடங்கு அதிகமான வேகத்தில் நம்முடைய யோசனைகள் ஓடும். யோசனை வேகத்தின்படி காரியத்தில் செய்து காட்டவுமான ஆற்றலும் அதிகரித்துவிடும்.

[illegible] தூரத்தையும் [illegible]

[illegible] வருவதுடன்

தான் ஒவ்வொரு யந்திரமும், அதில் விருத்தியும் கண்டுபிடிக்கப்படுகிறது. இவ்விதம் சுருக்க வேண்டியதின் அவசியத்திற்கு வேகத்தில் உள்ள ஆசையே காரணமாகும். முன்னேற்றம் வேகத்தை அடிப்படையாகக் கொண்டது.

### ஆகார-மாத்திரைகள்.

ஒரு மணி நேரத்தில் நூற்றுக்கணக்கான மைல்கள் பிரயாணம் செல்வது சகஜமாய் விடுவதாலும், உலகத்தின் ஒருமூலையிலிருந்தபடியே மற்றொரு மூலையிலுள்ள மனிதர்களோடு ஒரு விநாடியில் பேசும் சௌகரியத்தை அனுபவிக்கப்போவதாலும் வருங்கால மனிதன் மெதுவாகப் போகும் எதைக் கண்டாலும் சகிக்கமாட்டான். சாப்பிடுவதற்கும் அதிக நேரத்தை எடுத்துக்கொள்ளுவான் என்பது சந்தேகமான விஷயமே. ஒருவேளைக்கு வேண்டிய ஆகாரம் ஒரு மாத்திரை பரிமாணத்திற்கு வந்துவிடும். ஆகார சத்துக்கள் யாவும் அந்த மாத்திரையில் புகுத்தப்பட்டிருக்கும். பசி எடுக்கும் போது அந்த மாத்திரையில் ஒன்றை எடுத்து வாயில் போட்டு விழுங்கிவிடுவான். இது பறந்த வண்ணமாகவே நடந்துவிடும். தன்னுடைய வேகத்திற்குத் தடை ஏற்படாத வகையில் எல்லாவற்றையும் சுருக்கி விடுவான்.

### நித்திரை.

நித்திரையில் செலவழிக்க வேண்டிய நேரத்தையும் உபயோகிக்க வழி தேடுவான். தூக்கத்தினால் ஏற்படும் தேக பலத்தையும் ஓய்வையும் மின்சாரத்தின் உதவியால் பெற்றுக்கொண்டு, தூக்கத்தில் செலவழியும் காலத்தை மிச்சப்படுத்தி உபயோகிப்பான். சாதாரண கடியாரங்களுக்குப் பதிலாகக், கம்பியில்லாத் தந்திகடியாரங்களை உபயோகிப்பான். அது அவன் உடையில் ஒரு பாகமாய் இருக்கும். சிறிது நேரம் தூங்கி விழித்தவுடன் ஒரு விநாடியில் உலகில் நடக்கும் சகல விஷயங்களையும் கம்பியில்லாத் தந்தியின் மூலம் அறிந்து கொள்ளுவான். உலக விஷயங்களை அறிந்து கொள்வதற்காகத் தினசரிப் பத்திரிகைகளைப் படிக்க வேண்டியதில் வீணாகும் காலமும் மிச்சப்பட்டுவிடும். பிறகு இஷ்டப்பட்டால் உருத்தோற்றத்தின் உதவியால் உலகின் பல பாகங்களில் நடக்கும் விஷயங்களைப் பிரத்தியட்சமாய்க் கண்டறிந்து கொள்ளுவான்.

### உடை

50 வருடங்களுக்குப்பிறகு மனிதன் அணியப்போகிற உடை இன்று நாம் அணிகிறதைப் போலிராது. உடைமிக லேசானதாக இருக்கும். மேலும், இன்று இருப்பதுபோல் மேலே தரிக்கச்சொக்காய் கோட்டும் கீழே நிஜார் அல்லது தோவத்தியுமாகத், தனித்தனியாக இல்லாமல் உடல் முழுமைக்கும் ஒரே உடையாக கஷ்டமில்லாமல் விரைவில் போடவும் கழற்றவும் கூடியதாயிருக்கும். தேகம் சீதளத்தால் பாதிக்கப்படாமலிருப்பதற்காகக் குளிர்காலத்தில் உடைகளுக்குள் தேகத்திற்கு வேண்டிய அளவுக்கு மின்சார சக்தியின் உதவியால் உஷ்ணம் புகுத்தப்படும். அதாவது, வருங்கால மனிதனைப் பனியும் குளிரும் சிறிதும் பாதிக்காது. சூரிய கிரணங்களிலிருந்து வரும் உஷ்ணத்தை எடுத்து ஒருவித யந்திர விளக்குகளில் நிரப்பி வைக்கப்படும். அவ்விதம் சேமித்து வைக்கப்பட்ட உஷ்ணத்தின் உதவியால் பனிக்காலத்தின் தொல்லையை நீக்கிக் கொள்ளுவான்.

50வருடங்களுக்குப்பின் மனிதன், மின்சார சக்தியால் சூடாக்கப்பட்டு, மின்சார சக்தியின் உதவியால் ஓடும் வேகம் நிறைந்த வண்டியில் தன்னுடைய ஆபீஸுக்குச் செல்வான். வண்டியில் போகும் போதே ஆபீசிலிருக்கும் குமஸ்தாவிடம் ரேடியோமூலம் வார்த்தையாடுவான். ஆபீசில் நடக்கும் விஷயங்கள் யாவற்றையும் தெரிந்துகொள்வான்.

### பெண்கள்

1984-ல் அல்லது 1994-ல் உலகநிலை ஆண்களுக்கு எவ்விதமாற்றத்தை உண்டாக்கிவிடும் என்று சொன்னேன். இப்போது பெண்கள் எந்த நிலைமையிலிருப்பார்களெனப் பார்ப்போம்.

தங்களிஷ்டப்படி பெண்குழந்தை வேண்டுமென்றால் பெண்குழந்தையும், ஆண்குழந்தை வேண்டுமென்றால் ஆண்குழந்தையும் பெற்றெடுத்துக்கொள்வார்கள்.

50 வருடங்களுக்குப்பின் பெண்களுக்கு (முக்கியமாக மனைவிமாராயிருப்பவர்களுக்குக்கூட) அடுப்பூதும் வேலை இருக்கவே இருக்காது. அடுப்பு என்றால் என்ன? என்பது கூட வருங்காலத்துப் பெண்களுக்குத் தெரியாமல்போய்விடுமென்

றால் சமயல்வேலையைப், போஜனக் கடைகள் ஏற்றுக்கொண்டு வேளா வேளைக்கு கேட்டவர்களுக்குச் சாப்பாடு அனுப்பிவைக்கும். சமையல் வேலை ஒழிந்து விடுகிறபடியால் வீடுகள் தட்டுமுட்டுச்சாமான்களால் நிரப்பப்படாமல், இடம் தாராளமாயிருக்கும். இயந்திர மனிதன் வீட்டு வேலைகளைச் செய்துவிடுவான். வீடுகள் துப்பும், தூசும், ஒட்டடையும் படியமுடியாத மாதிரியில் மூலைகள் ஏற்படாதிருக்க, வட்டம் வட்டமாகக் கட்டப்படும்.

இவ்வித ஏற்பாடுகளால் வருங்காலப்பெண்களுக்கு சிரமம் நீங்கிவிடுவதோடு, காலமும் மிச்சப்படும். அதனால் பெண்கள் படிப்பாளிகளாகவும் அறிவாளிகளாகவும், பெரிய அரசியல்வாதிகளாகவும், வியாபார நிபுணர்களாகவும், திகழ்வார்கள். மனித முன்னேற்றமே ஓர் உருவாகவந்தாற்போல் விளங்குவார்கள்.

மனிதன் உலகத்தின் ஒருபாகத்திலிருந்தபடியே மற்றப் பாகங்களில் நடக்கும் விஷயங்களை ரேடியோமூலம் அறிந்துகொள்ளச் சௌகரியம் ஏற்படும். பலபாகங்களிலிருந்தும் ரேடியோமூலம் வரும் செய்திகள் பல பாஷைகளைக் கொண்டதாயிருப்பதால், ஒருவர் பாஷையை ஒருவர் கற்றுக்கொள்ளவும் அதன் பயனாகப் பரஸ்பர உணர்ச்சியும், சிநேகமும், சகோதரத்துவமும் உண்டாகச் சந்தர்ப்பமளிக்கும்.

●

# கல்லூரிகளில் மதபோதனை

[பேராசிரியர் பராஞ்சிபே]

பழக்கத்திலிருந்து வரும் பல அபிப்பிராயங்களையும் சமூக ஒழுக்கத்தையும் தற்காலக் கல்வியானது மாற்றி வருகின்றது; இது தற்காலக் கல்வியால் ஏற்படும் தீமையென்று சொல்வோர் இதைத் தெய்வ நம்பிக்கையற்ற கல்வியென்று சொல்வதுடன், கலாசாலைகளிலும், கல்லூரிகளிலும் மதபோதனை மிக இன்றியமையாததென்றும் வற்புறுத்துகின்றனர். நம் நாட்டில் ஆங்கிலக் கல்வி புகுமுன்னர், ஒவ்வொரு குழந்தையும் அதன் மதத்தைத் தவிர வேறொன்றையும் கல்லாது இருந்திருந்தால, இங்கு வியாபாரம் செய்வதற்காக வந்த ஒரு சில அந்நியர் கைக்குள் இந்தியா எளிதாக விழத்தக்க நிலைக்கு எவ்வாறு வந்தது என இந்த 'மதபோதனை'க்காரர்களிடம் கேட்கலாம். சுய அறிவும், கற்பனா சக்தியும் அமுக்கப்பட்டு, மக்கள் அனைவரும் அறியாமையில் ஆழ்ந்து, பழையனவெல்லாம்தெய்வீகமானது என்ற நம்பிக்கையுடன், புதிதாக ஒன்றையும் அறிய முடியாதிருந்ததனால் அல்லவா இந்த நிலைமை ஏற்பட்டது! விதியென்ற எண்ணத்தால், எதிலும் சுய முயற்சியை ஈடுபடுத்த விடாமல், இந்தப் பழங் கொள்கைகள் மக்களை வலியுறுத்தவில்லையா? மதத்தால் அனுமதிக்கப்பட்ட பல்வேறு வகுப்புகளும், மிக அவசியமான சந்தர்ப்பத்திலும் ஒன்றுகூடி ஒத்துழைக்க முடியாதென்று நம்பிக்கையை மக்கள் மனத்தில் ஆணியடிக்கவில்லையா? மதக் கொள்கையென்பது, வெறும் சாரமற்ற சடங்குகளை அனுஷ்டிப்பது மட்டுமே என்ற கீழ்நிலை அடையவில்லையா? தங்கள் மனதிற்குப் பிடிக்காத மாறுதலில் வெறுப்புக் கொண்டுதான், இந்தப் பழமை விரும்பிகள், மத போதனைக் குறைவால் தீமைகள் ஏற்பட்டு விட்டதாகக் கூக்குரலிடுகிறார்கள். முன்னேற்க வேண்டியிருக்க, இவர்கள் எப்பொழுதும் பின்னோக்கியே செல்கின்றார்கள். எதிர்காலம் சீர்பெற வேண்டுவதற்கன்றோ உழைக்க வேண்டும்! சகல மதங்களுக்கும் அடிப்படையான தத்துவக் கருத்துக்களைப் பற்றி எதுவும் கூற நான் விரும்பவில்லை. ஆனால் இந்தத் தத்துவங்களைச் சிறுவர்கள் உணர்வது மிகக் கஷ்டம். ஆகவே, மதபோதனை அர்த்தமற்ற சடங்காகவோ அல்லது எந்தவிதமான பொருளுமிலலாத வெறும் வார்த்தை உச்சாடனமாகவோதான் முடியும். உங்கள் மதம், அல்லது சாதியைச் சேராத ஒருவர் உங்கள் உலகத்தவரல்ல என்ற எண்ணத்தைத்தான் மாணக்கர் மனதில் வலியுறுத்தும். இளவயதில் அளிக்கப்படும் பயிற்சி சிறுவர் மனத்தை விசாலப்படுத்த என்னவெல்லாம் அவசியமோ அதையெல்லாம் செய்யத்தக்கதாக இருக்கவேண்டும். மதக் கல்வி அவசியமென வற்புறுத்தினால் நமது வகுப்பு வித்தியாசங்களை அது அதிகப்படுத்தும். இதனால் தேசிய ஒற்றுமை இப்பொழுதிருப்பதைவிட அதிகக் கஷ்டமானதாகிவிடும். மதத்தில் விருப்பங் கொண்டுள்ளவர்கள், மதக்கொள்கைகள் எவ்வாறு பரிணமித்து வருகின்றனவென்று படிப்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை. அத்தகைய கல்விக்கு நமது யூனிவர்ஸிட்டிகளும் வசதியளிக்க வேண்டியதே. பகுத்தறிவு வாதத்துடன், மதபோதனையும் பயன் தரத்தக்கதாக இருக்குமெனக் கருதினால், படிப்பவருடையமதத்தைத்தவிர்த்து வேறொரு மதத்தைப் படிப்பதே சிறப்பென நான யோசனை கூறுவேன். ஏனெனில், இவ்விஷயத்தில் மாணவன் பாரபட்சமின்றி இதை ஆராய்ந்து உண்மையை உணரமுடியும். ஆனால் இம்முறையை, மத போதனை அவசியமென்போர் ஆதரிப்பார்களென நான் கருதவில்லை.

ஒழுக்கக் கல்விக்கும், நற்குணப் பயிற்சிக்கும் மதக்கல்வி அவசியமென வேறு சிலர் கூறுகிறார்கள். சரித்திர உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு ஒழுக்கக் கல்வியளிப்பது சாத்தியமே. நேரடியாக இவ்விஷயத்தில் போதிப்பதைவிட, பள்ளிக்கூடங்களில் ஒழுக்க முறைகளைக் கையாண்டு நடத்தியும், ஆசிரியர்களது சொந்தச் செல்வாக்கை உபயோகித்தும் மாணவர்கள் நல்லொழுக்கத்தில் பழகும்படி செய்வது எல்லாவற்றிலும் சிறந்த வழி. இந்த வழி கையாளப்படாவிட்டால், வெறும் மதபோதனையால் விரும்பத்தக்க பலன் எதுவும் ஏற்படாது; ஆனால் அதற்கு நேர்மாறாக கபட வேஷதாரிகளையே உண்டு பண்ணும். இவர்கள் உயரிய கொள்கைகளைத் திருப்பித் திருப்பிக் கூறினாலும், இவர்களது நடத்தை உயரிய கொள்கைகள் — இவர்களது மதத்திற்கு அடிப்படையானவை என்று கருதப்படும் கொள்கைகளுக்கு நேர்விரோதமாகவேயிருக்கும்.

ஆசிரியர்களது திறமை அபிவிருத்திய, தேசியக் கல்வி முறைக்கு முக்கிய தேவையாக இருக்கின்றது. உயரிய குணவிசேஷமுள்ளவர்களையும், உபாத்திமைத் தொழிலில் உண்மையான விருப்பமுள்ளவர்களையுமே தெரிந்தெடுக்க வேண்டும். வேறு துறைகளில் தோல்வி ஏற்படும் என்ற காரணத்தால் வேறு வழியின்றி உபாத்திமைத் தொழிலில்

(16-ம் பக்கம் பார்க்க)

புதிய தொடர் கதை

கற்பனைச் சித்திரம்



[14—3—48 தொடர்ச்சி]

கொலை! கொலை!! என்ற சத்தம் வந்த திக்கு நோக்கி ஓடிய சுந்தரேசன், இருவர், ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதையும், கீழே ஒரு கத்தி வீழ்ந்து கிடந்ததையுங் கண்டான். கத்தியை எடுத்து மடியிற் சொருகிக்கொண்டான். இருவரிலே, யார், தன்னை அழைத்தது? யாருக்கு உதவி செய்வது என்பது? தெரியாது, சண்டையைத் தடுக்க இருவர் இடையே புகுந்தான். உடனே இருவரிலே ஒருவன் ஓடிவிட்டான். மற்றவன் களைத்து மண் மீது சாய்ந்தான். ஓடிவிட்டவனே கள்ளன், கொலைக்காரன் என்று எண்ணி, இருவருக்குள் என்ன காரணத்தால் சண்டை வந்தது என்று விசாரிக்கத் தொடங்கினன். இதற்குள் போலீஸ்காரன் ஊதுகுழல் சத்தம் கேட்டது. சுந்தரேசன் எழுந்து இப்பக்கமும் அப்பக்கமும் நோக்கினன். மூன்று போலீசார், ஓடிப்போனவனுடன் அங்கு வந்தனர். “அதோ! அந்த ஆள்தான்! அதே ஆள்! பிடியுங்கள்” என்று அவன் கூவினன். சுந்தரேசனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. போலீசார், டாக்டரைப் பிடித்துக்கொண்டனர். அதே நேரத்தில் ஓடிப்போய்ப் போலீசை அழைத்துக் கொண்டு வந்தவன் மண்ணில் படுத்திருந்தவனைத் தூக்கி மார்பில் சாய்த்துக் கொண்டு, “கந்தா! பயப்படாதே! போலீசார் வந்து அந்தப்பாவிப் பயலைப் பிடித்துக்கொண்டனர்” என்று கூற, மயங்கிக் கிடந்தவன், கண்ணை விழித்துக்கொண்டு, “புண்யவான்களே! நல்ல சமயத்திலே இங்கு வந்தீர்கள். நாங்கள் இரண்டு பேரும், இங்கே உலாவிக்கொண்டே இருந்தோம். இந்தப் பாவி திடீரென இங்கு வந்தான். வீண் சண்டைக்கு இழுத்தான். கத்தியால் குத்த வந்தான். கத்திகூட மடியிலே இருக்கிறது” என்று திணறித் திணறிக் கூறினன்.

சுந்தரேசன் திடுக்கிட்டுப் போனன். “ஆஹா! என்ன சதிநாடகம். அடே மோசக்காரப் பயல்களா! நீங்கள் சண்டை போடுவதுபோல் போட்டு, கொலை கொலை என்று கூவி, நான் வந்ததும் வஞ்சனையாக என் மீதா அபாண்டம் சுமத்துகிறீர்கள்” என்று சுந்தரேசன் கதறினன். போலீசார், இதற்குள் டாக்டர் மடியிலே கத்தியைக் கண்டுபிடித்து எடுத்தனர். “ஏனப்யா, பார்த்தால் பெரிய மனிதன் போல் காண்கிறது. இந்த “ரௌடி”த்தனம் ஏன்? வெறியா? பித்தமா” என்று டாக்டரைத் திட்டினர். ஒருபாபமும் அறியாத தன்மீது பழி சுமத்திய பாதகர்கள் பேச்சுத்தானே போலீஸ்காரர் செவிக்கு ஏறியது என்பதை எண்ணித் துடித்தான். கோபமிகுதியால் “முட்டாள்களே! தடியன்களே நான் வெறியனல்ல! இந்தப் பயல்கள் பொறுக்கித்தின்னும் பேர்வழிகள்; இவர்கள் பேச்சைக்கேட்கும் நீங்கள் முட்டாள்கள்” என்று பேசினன். போலீசார் “சரி! அதெல்லாம் கோர்ட்டிலே சொல்லு, நட” என்று அதிகார தோரணையிலே பேசி, சுந்தரேசனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று “லாக்கபில்” தள்ளிவிட்டனர். இரவில் குடித்துவிட்டு, வெறியின் காரணமாக! கடற்கரையிலே கலகம் செய்து, கத்தியால் இருவரைகுத்த முயற்சித்ததாக, சுந்தரேசன்மீது கேஸ். லாக்கப்பில் போனபிறகுதான் தெரிந்தது, சுந்தரேசனுக்குத் தன் சொக்காயிலிருந்து சாராய நாற்றமடிப்பது. சண்டை சந்தடியிலே, சாராயத்தையும் எப்படியோ, தன் சொக்காயிலே ஊற்றியும் விட்டார்கள், தான் குடித்துவிட்டுக் கலகம் செய்ததை ருஜுப்படுத்த.

இவர்கள்யார்? ஏன் தன்மீது இத்தகைய பழிசுமத்த வேண்டும்? எதற்காக இந்தச்சதி? என்பது, சுந்தரேசனுக்குத் தெரியவில்லை. திகைத்துப் போனன். யோசிக்கக்கூட அவனல் முடியவில்லை. அவ்வளவு எதிர்பாராத சம்பவம் அல்லவா அவனுக்கு நடந்தது.

* * *

காலையில் ஜாமீனில் விடப்பட்டான் சுந்தரேசன். வழக்கு நடந்தது. வக்கீல் வாதாடினர். ஆனல் கடைசியில் குடிவெறி காரணமாகக் கலகம் செய்ததாகவே சுந்தரேசன்மீது குற்றஞ்சாட்டப்பட்டு, அபராதம் விதிக்கப்பட்டது. தனக்கு இத்தகைய வீண் பழியையும் அவமானத்தையும் உண்டாக்கியவர்கள் கண்ணுசாமியின் ஆட்கள் என்பது சுந்தரேசனுக்குப் பிறகே தெரியவந்தது. டாக்டர், தான் ஒரு குற்றமும் செய்யவில்லை என்று எவ்வளவோ எடுத்துக் கூறியும் வக்கீலே நம்பவில்லை. சுந்தரேசனின் தாயோ தன்மகன் வேசி வீடு போனதோடு நிற்கவில்லை, குடித்துவிட்டு ஆடியும் அவமானப் பட்டான் என்று எண்ணி ஏங்கினள். இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வளவு கெட்டுவிடுவான? ஆண்டவனே! ஏனே இப்படி அவனுக்குப் புத்தி கெட்டுவிட்டது? என்று எண்ணி வாடினள். உலகத்திலே இப்படியும் மோசம் நடக்கிறதே என்று எண்ணி சுந்தரேசனின் மனம் புண்ணுகி விட்டது. யாரிடம் தன்சேதியைச் சொன்னலும் நம்பாது, கோர்ட்டின் முடிவையே நம்பி, “இருக்கும்; இருக்கும்” என்றே கூறுவதைக்கேட்ட சுந்தரேசனுக்கு வெந்தபுண்ணில் வேல் நுழைவது போன்று இருந்தது. “என்ன உலகம்! எவ்வளவுமோசம்” என்று நினைத்து உலகத்தை வெறுத்தான். இவ்வளவு சூதும் வஞ்சனையும் சூழ்ந்திருக்கும் உலகத்தில் தானே மனிதன்வாழவேண்டி இருக்கிறது. இதிலிருந்து தப்புவது எப்படிஎனப்பயந்தான். ஒருதவறும்செய்யாத நான், குடிகாரன், வெறியன்,

(18-ம் பக்கம் பார்க்க)

# மாச்சரிய மின்னல்! ஏசல் இடி! வசைமாரி!

## எல்லூர் சம்பவம்—ஒரு பாடம்

கூட்டத்தைக் கலைத்துவிடுகிறேன்!

* * *

கூடாது! கூடாது! கலைக்காதே!

* * *

கலைக்கவேண்டுமா? ஓட் எடு! ஓட்!!

* * *

குழப்பம் அதிகமாகிவிட்டது! இனிக் கூட்டம் நடத்த முடியாது. ஆகவே கூட்டத்தைக் கலைத்து விடுகிறேன்.

* * *

வெட்கம்! வெட்கம்! வெட்கம்!

* * *

தலைவர் கூட்டத்தைக் கலைத்து விடுகிறார். அவருடைய தாக்கீது செல்லக்கூடியதல்ல என்று கூட்டத்திலிருந்தோர் சீறுகிறார்கள். அந்தச் சீறல், வெட்கம்! கேவலம்! என்று பலவிதமான வார்த்தைகளாகி வெளிவர, ஏற்கனவே, இருந்த குழப்பம் அதிகமாகி, கூட்டம் மிகவும் மோசமான நிலையை அடைகிறது, கூட்டமும் கலைகிறது.

* * *

இது சகஜந்தானே. ஒருகட்சியின் கூட்டம், மற்றக்கட்சித் தோழர்களால் இப்படித்தான், கலைக்கப்படுகிறது. நம் நாட்டுப் பொதுவாழ்க்கையிலே, கூட்டத்தில் குழப்பம் விளைவிப்பது ஒரு மகத்தான "கலை" யாகிவிட்டது! அதற்கு என்ன செய்யலாம்! பல கட்சிகள் இருப்பதே இந்தத் தொல்லையைத்தான் ஏற்படுத்துகிறது. மனமாச்சரியமும், அதன் விளைவாகச் சச்சரவும் ஏற்பட்டு, பொதுவாழ்வே அவலட்சணமாகிவிட்டது. இந்த அவலட்சணத்தை ஒழிக்க வேண்டுமானால், கட்சிப் பிரதி கட்சிகள், என்று இருப்பதே கூடாது. கலாம் விளைவது கட்சிகளால் — கட்சிகள் இல்லையானால், கலகம், குழப்பம், இல்லை, என்று 'இதோபதேசம்' செய்யும் இன்சொலாளர்கள் பலர் உண்டு. ஆள்வதற்கு ஒரு கட்சி, அதன் கொள்கைகளிலேயோ, வேலைத்திட்டத்திலேயோ, குறைபாடுகள் இருக்குமேயானால், கண்டறிந்து கூறி, திருத்தவோ, கண்டித்து, அதன் போக்கை மாற்றவோ, ஓர் எதிர்க்கட்சி இருப்பதும் கூடாது, என்று வெளிப்படையாகவே, சில ஏடுகள், எழுதவும் தொடங்கிவிட்டன — வெட்கமும் பயமும் இன்றி! இவ்விதம், எதிர்க்கட்சியே இன்றி, நடத்தப்படும் ஆட்சிமுறைக்குத்தானே, சர்வாதிகாரம், பாசிசம், நாசிசம், என்று பெயர்—அறிஞர் உலகு இம்முறையைக் கண்டித்திருக்கிறதே, அனுபவபூர்வமாகவே தெரிந்தும் விட்டதே இம்முறையினால், அழிவுதான், உலகுக்கு விளைவாகக் கிடைக்கும் என்ற உண்மை. இருந்தும், எப்படி ஐயா! கட்சியே கூடாது என்று கூற துணிவு உமக்கு ஏற்படுகிறது, என்று கேட்டாலோ சில வருஷங்களுக்காவது, ஏகபோக உரிமை வேண்டும், என்று கெஞ்சி, சுருதியை இறக்கிப் பேசுகிறார்கள்—பிடிபட்ட கள்ளன் அடிபட்ட பிறகு, அழுகுரலில், அபயம் கோருவது போல! வேறு சிலர் இருக்கிறார்கள், அப்போதும் தமது ஆர்ப்பரிப்பைக் குறைத்துக்கொள்ள மறுத்து, நான் யார் தெரியுமா? என் வீரதீர பராக்கிரமத்தை நீ அறிவாயா? — என்று பற்களை நறநற வெனக்கடித்துக் கொண்டு பேசி, ஏச. நல்ல வேளையாக, அத்தகைய குணாளர்களின் தொகை குறைவு, குறைந்து கொண்டு வருகிறது.

ஆளவந்த கட்சிக்கு இருக்கும் அதரவு, ஆர்ப்பரிப்பாலோ, அசட்டுத்திட்டங்களினாலோ, வளராது-குறைபத்தான் செய்யும்-ஆனால் ஆளும் வாய்ப்பைப் பெற்றதால், இயற்கையாக ஏற்படும் மகிழ்ச்சி, மமதையாகி விடுகிறபோது, மதிமயங்கி விடுவதும், மங்கிய மதியினரானதும், தமது கோபம் பொங்கினால் குவலயம் தாளாது அடிபணியும் என்ற எண்ணம் ஏற்பட்டு விடுவதும் சகஜம். மேதைகளே, இந்த மமதையினால், ஆட்டிப்படைக்கப்பட்டிருக்கிறார்களென்றால், 'சாதாரணங்களை'ப் பற்றிச் சொல்ல வேண்டுமா? சூறாவளி வீசுகிறபோது பெருமரங்கள் நிலைகுலைந்து வீழ்வதுண்டு, ஆனால், அதே போது குப்பை கூளம் ஒரு சமயம், கோபுரத்தின் மீது தங்கி விடுவதுமுண்டு. அறிவுடையோர், வீழ்ந்த மரம் வலிவற்றது என்று எள்ளி நகையாடிவிட்டு, கோபுரமீதேறிக்கொண்ட குப்பை கூளம் சக்தி வாய்ந்தது என்று கூறிக் கொண்டாடமாட்டார்கள். குறைமதியினர் கொள்வர் அத்தகு எண்ணம். அரசியல் வாழ்விலேயும், அதிகாரம் கிடைத்த உடனே, அது நிரந்தரம் என்றோ, தமது சொந்தத் தகுதி திறமையினாலேயே கிடைத்தது என்றோ எண்ணம் ஏற்பட்டு விடுவதுண்டு — வரலாறு படித்து மறவாதவர்களுக்கல்ல — வெற்றி வாடைக் காற்று வீசிய பக்கம் இருக்க நேரிட்ட காரணத்தால், மட்டும் 'உயர்வு' கிடைக்கப் பெற்றவர்களுக்கு. அத்தகையவர்களின் அறிவுக் கண்களைத் திறந்துவைக்கும் அறப்பணி புரிய வேண்டிய பொறுப்பை, சில ஏடுகள் மறந்து அவர்களுக்கு மமதையை ஊட்டுகின்றன. அந்த மமதை, மறைமுக விஷம், என்பதை அறியாதார் அதனை உட்கொண்டும் விடுகிறார்கள். இந்தச் சூழ்நிலையிலே தான், சர்வாதிகாரம் பிறக்கிற வழக்கம். ஆளும் கட்சிக்கு மாறாகவேறோர் கட்சியும்,

இருக்கக்கூடாது, என்று எழுதும் ஏடுகள், நாட்டுக்கிழைக்கும் பெருந் தீங்கினைப் பொதுமக்கள் உணர வேண்டுகிறோம். அமைச்சர் டாக்டர் சுப்பராயன், இந்தப்போக்கினை அறிவுலகம் கண்டித்துத்தான் பேசும் என்பதனை உணர்ந்துதான் சில பல 'தடைகள்' போட்ட காரணத்தை விளக்கிப் பேசுகையில், "எந்த அரசியல் கட்சியையும், தடைசெய்யும் நோக்கம் எமக்கு இல்லை" என்று கூறி இருக்கிறார். சர்வாதிகாரக் கோலம்கொள்ளும்படி ஆளும் கட்சியைத்தூண்டும் 'ஏடுகள்' அமைச்சரின் அறிவுரையைக் கவனிக்க முயற்சிக்கட்டும். எதிர்க்கட்சிகளே கூடாது, என்ற எண்ணம், ஜனநாயகக் கொள்கை, நாகரீக அரசியலின் நங்கூரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்நாளில் சிலருக்கு ஏற்படுகிறதென்றால், அதனை நாம், பெரியதோர் நோய், எனறே கூறுவோம். டாக்டர் சுப்பராயன், அந்தநோயின் பிடியிலே சிக்கமறுக்கும் போக்கு, பாராட்டத்தக்கதே அவ்விதமின்றி, டாக்டரும் நோய்வாய்ப்பட்டு விடுகிறதைப்போல், தூபமிடும் ஏடுகளின் பிடியிலே ஆளும் கட்சி தன்னைத் தானே ஒப்படைத்து, கட்சிகளே கூடாது என்று தடைவிதிக்கவோ அல்லது கட்சிகள் நடைபெற முடியாதபடி காரியங்களை ஆற்றவோ முனைகிறது என்று வைத்துக்கொள்வோம். என்ன நேரிடும்? கட்சிகளே இல்லாது போய்விடுகின்றன என்றும் கொள்வோம். என்ன நேரிடும்? என்ன நேரிடக்கூடும் என்பதை விளக்குவதுதான், துவக்கத்திலே நாம் பொறித்துள்ள சாட்சியின் கருத்து!

கூட்டத்தில் குழப்பமும், கலாமும் விளைந்து, தலைவரின் தாக்குதலும் கூட்டத்தினரின் கூச்சலும் ஒன்றோடொன்று மோதிக்குழப்பம் அதிகரித்த நிலைமையை, விளக்குவது, துவக்கத்தில் நாம் வெளியிட்டுள்ள தகவல். இந்தக்குழப்பம், ஒரு அரசியல் கட்சிக்கும், அதன் எதிர்க்கட்சியாக உள்ள மற்றோர் அரசியல் கட்சிக்கும் இடையே ஏற்பட்ட, 'மோதுதலின்' விளைவு அல்ல! ஒரே கட்சிக்குள், கிளம்பிய கருத்துவேற்றுமையின் விளைவு! குடும்பச் சண்டை!

அரசியல் கட்சிகள் ஒன்றோடொன்று கருத்துப் போர்புரிவது கூடாது, என்றுகூறி, அதற்காக எதிர்க்கட்சி என்று எதுவும் இருக்கலாகாது என்று எண்ணுபவர், கட்சிகளைக் கலைத்து விடுவதாலேயே, கருத்து வேற்றுமைகளைக் கலைத்து விடுவதாகவோ, கருத்து வேற்றுமை முளைக்கவே முடியாதபடி ஓர் பாழ் நிலையை மக்கள் மனதிலே உண்டாக்கிவிட முடியுமென்றோ, எண்ணுவார்களானால், அதைவிட ஏமளித்தனம், வேறெதுவும் இருக்க முடியாது என்போம். கருத்துவேற்றுமைகள் ஒரு கட்சிக்குள்ளாகவே தோன்றுவதுண்டு. அப்போது ஏற்படும் நிலைமை, ஜனநாயக முறைப்படி அமையும் கட்சிகளால் உண்டாக்கப்படும் கண்ணியமானநிலைமையாக இராது—கட்டுக்கூச்சலாக இருக்கும்—விவாதம், விஷயவிளக்கம், கொள்கையைப் பரப்பும் பிரசாரம், என்ற முறை இராது, கமிட்டிக்கூட்டங்களில் கூச்சல், ஆள் மாறாட்டம், பெயர்மாறாட்டம், ஒருவருக்கொருவர் தத்தமது திருக்கலியாண குணங்களைப்பற்றிய திருப்பாசுரம் பாடிக்கொள்வது, யார் உண்மையான கொள்கைக்காரர் என்று அளந்து பார்ப்பது, என்ற இதுபோன்ற காரியங்கள் நடைபெறும். நிலைமை, அப்போது, எவ்விதம் இருக்கும் என்பதை விளக்குவது, துவக்கத்திலே நாம் வெளியிட்டுள்ள தகவல். இப்போது ஒருமுறை, அதனைப் படியுங்கள்!

* * *

தேர்தல் காலத்திலே நடைபெறும் அரசியல் கூட்டங்களிலே, ஒரு அரசியல் கட்சி, மற்றோர் அரசியல் கட்சியின் கூட்டத்திலே கலவரம் விளைவிப்பதன் மூலம், பிரசாரபலத்தைச் சிதைக்கலாம் என்று எண்ணுவதுண்டு. இருகட்சிகளும், நடத்தும் பிரச்சாரப போரின்பயனாக, பொது மக்களுக்குச் சங்கடம் விளைவதுமுண்டு—சச்சரவுகள் நிகழ்வதுண்டு. இது கூடாது என்று, அமைதியை விரும்புவோர் கூறுவதுண்டு. இதனையே சாக்காகக் கொண்டு, நாட்டிலே ஓரேகட்சிதான் இருக்கவேண்டும், என்று கூறி நாஜிசத்தைப் பரப்பும் போக்கினர் உண்டு. அவர்களின் எண்ணத்தின்படி, கட்சிகள் கலைக்கப்பட்டு, காங்கிரஸ் மட்டுமே இருக்கிறது, என்றாலும், எத்தகைய காட்சியை நாடு காணவேண்டி நேரிடும் என்பதற்கு, இந்தத் தகவல் ஓர் எடுத்துக்காட்டு.

* * *

மேல்கோதாவரி காங்கிரஸ் கமிட்டி கூட்டம் சென்ற ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்குத் துவக்கப்பட்டது. திங்கட்கிழமை மாலை, மேற்படி கமிட்டிக் கூட்டம், பெரிய குழப்பத்தில் முடிந்தது, நிலைமையைச்சமாளிக்க முடியாதென்று கூறி, தலைவர், கமிட்டிக் கூட்டத்தைக் கலைத்து விட்டார்.

கமிட்டிக் கூட்டம்! அதிலே இவ்வளவு குழப்பம்!! 30 மணி நேரம் நடந்திருக்கிறது கமிட்டிக் கூட்டம்! அவ்வளவு நேரமும் கலகம், குழப்பம், ஏசல் இடி, மாச்சரியமின்னல், வசைமாரி!

கமிட்டிக் கூட்டம், 30 மணி நேரமும், ஒரே இடத்தில் நடைபெறாமல், இந்தத்தகறாருத் திருவிழாவை, எல்லூர் நகரில் மூன்று இடங்களில், நடத்தினராம்—வியாபாரச் சங்கத்திலே—காந்திஸ்கூல்—கமிட்டி கட்டடம் ஆகிய மூன்று இடங்களில் மூகாம்—மாறி மாறி அமைத்துக் கொண்டு, கூட்டம் நடத்தினராம். மூன்று இடங்களிலேயும், கலகம்!

வரவு செலவுக் கணக்கு, ஆண்டு அறிக்கை, இவைபற்றி விவாதிக்கத்தான், கமிட்டிக் கூட்டம். கொள்கை விளக்கம், திட்டம் தீட்டுதல், கூட அல்ல பரிசீலிக்கப்படாத காலமாக, கமிட்டி கூடாமலே இருந்தது பிறகு கூடிற்று. கூடின விளைவு இது! ஏன், இந்தக் குழப்பம்? கமிட்டிக்கூட்டம், களமான காரணம் என்ன?

கோதாவரி மாவட்டக் காங்கிரசின் பொதுக் கூட்டத்தை, கோதாவரி மாவட்டக் கம்யூனிஸ்டு கட்சியினர், கலகம் செய்து கலைத்தனர், என்றால், காங்கிரஸ் என்றும் கம்யூனிஸ்டு என்றும் கட்சிகள் இருப்பதால், இப்படிப்பட்ட கலகங்கள் விளைகின்றன என்று கூறிவிடக் கூடும். இந்தக் கலகமோ, காங்கிரஸ் கமிட்டிக்குள்ளாகவே!! ஒரு இடத்தில் கூடி, பலமணி நேரம் பேசி, பூசல் முற்ற, வேறு இடம் நாடி அங்கும் கலகம் தொடர்ந்து நடைபெற, மூன்றாம் இடம் தேடிச் சென்று கமிட்டிக் கூட்டத்தை நடத்திப் பார்க்க அங்கும் குழப்பம் மூண்டு விட, முப்பது மணி நேரத்துக்குப் பிறகு, 'படமுடியாதினித் துயரம்' என்று பாடி, கமிட்டித் தலைவர், கூட்டத்தைக் கலைக்க, வெட்கம்! வெட்கம்! என்று பலர் கூவ, இவ்விதமான

இலட்சணங்களுடன், ஒரு கமிட்டிக் கூட்டம், நடைபெற்றிருக்கிறது.

நாட்டிலே, காங்கிரஸ் தவிர வேறு கட்சிகளே தலைகாட்டக் கூடாது என்று பேசும், 'புத்திசாலிகள்' இந்த நெல்லூர் சம்பவத்தைக் கவனிக்க வேண்டும். கட்சிகளைக் கலைத்துவிட்டால், என்ன நேரிடும்? நெல்லூர் எங்கும் தோன்றும்!

காங்கிரஸ் கமிட்டியினர், விவாதித்த பலவிஷயங்களில் ஒன்று அந்த மாவட்டத்திலுள்ள உழவர்களுக்கு, காங்கிரஸ் கமிட்டி பணியாற்றிற்று என்பது பற்றியதாகும்.

தோழர் A. சத்திய நாராயண ராஜு, M. L. A, "அந்த மாவட்டத்தில், ஜெமீன் பிரதேசங்களில் பாடுபடும் உழவர்களின் குறைகளைப் போக்கி, அவர்களுக்கு நன்மை புரிந்து, அவர்களின நம்பிக்கையைப் பெற, ஜில்லா காங்கிரஸ் கமிட்டி முயற்சிக்கவில்லை என்று, குற்றம் சாட்டினார். கமிட்டியிலே வேறுசிலர், அவருடைய குற்றச்சாட்டை மறுத்துப் பேசினார். அவர் பதிலளித்தார். வேறு சிலர் அவர் போக்கைக் கண்டிக்கலாயினர். அவர் உரையைச் சிலர் ஆதரிக்கலாயினர். விவாதம் வளர்ந்தது. பேச்சுப் புயல் வீசலாயிற்று. குழப்பம் கூத்தாடிற்று. தலைமை வகித்த கமிட்டிக் தலைவர் தோழர் சூரியநாராயண கலங்கினார். இடம மாற்றினார்—இடர், தொடர்ந்தே வந்தது. குழப்பம் வலுத்தது. கூட்டத்தைக் கலைத்தார் தலைவர்.

உழவர்களுக்கு, மேலக் கோதாவரி மாவட்டக் காங்கிரஸ் நன்மை புரிந்ததா இல்லையா, என்பது பற்றி, மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி விவாதித்தபோது, 30 மணி நேரக் குழப்பமும், கூட்டம் குழப்பத்தில் முடிந்தது, என்ற நிலையும் ஏற்பட்டது! காங்கிரஸ் கமிடடிக்குள்ளேயே ஒரு குறிப்பிட்ட பிரச்னைமீது ஏற்பட்ட விவாதம் இந்த நிலைமையை ஏற்படுத்திற்று, என்றால், பல்வேறு பிரச்னைகள் பற்றிய கருத்து வேற்றுமைகளை மறைத்துக்கொண்டு, ஒரே முகாமுக்குள் உட்கார்ந்துகொண்டால், நித்த நித்தம் எங்கும் நெல்லூர் தானே நடைபெறும்! நல்லதா அது? நாகரீகந்தானா? என்பது பற்றி, நாட்டிலே காங்கிரஸ் தவிர வேறு கட்சியே கூடாது என்று பேசும நண்பர்கள், எண்ணிப்பார்க்க வேண்டும். மக்களை மரக்கட்டைகளாக்கி விடும் 'மாய சக்தி' அந்த நண்பர்களிடம் உண்டு என்று நாம் நம்பவில்லை—மக்கள், தங்கள் முன்தோன்றும் பல்வேறு பிரச்னைகளைப் பற்றி, கருத்துகளைக் கொள்வது, தவிர்க்க முடியாதது மட்டுமல்ல, அந்தப் பண்பு, போற்றி வளர்க்கப்படவேண்டியதொன்றாகும். பிரச்னைகள்மீது கட்சிகள் அமைக்கப்பட்டால், பிரச்னைகளைப் பற்றிப் பிரசாரம் செய்யவும், மக்களின் ஆதரவைத் திரட்டவும் இயலும். எந்தப் பக்கம் மக்களின் ஆதரவு பெருவாரியான அளவுக்கு இருக்கிறதோ, அதனையே, நாட்டின் முறையாகக் கொள்வது என்ற குடியரசுக் கோட்போடு செழிக்கும். இதனைத் தகர்த்துவிட எண்ணினால் நடெங்கும் நெல்லூர் சம்பவம்போல், கமிட்டிக் கூட்டங்கள், கலகக் காடுகளாக மாறிவிடுமே யன்றி, அமைதியும் ஒழுங்கும் நிலவாது. பலர், வேறு கட்சிகளிலிருந்துகொண்டு வேதனைப் படுவானேன், காங்கிரசுக்குள்ளேயே சென்றுவிடுவோம் என்று எண்ணி, உள்ளே புகுந்துகொள்வர்—பிறகு வரும் பூசலை, எப்படித் தடுப்பது? யார் தடுப்பது?

நெல்லூரில் காங்கிரஸ்காரர், ஜெமீன்குடியானவர்களுக்கு நன்மை செய்யவில்லை என்பதைக் கம்யூனிஸ்டுக் கட்சியினர் கூறினால், மாஸ்கோ பேச்சு அது! அதனை இந்த பாரததேச மக்கள் நம்பமாட்டார்கள், என்று கூறிவிட்டு, அந்தக் கம்யூனிஸ்டுகள், ஆகஸ்ட்டுத் துரோகிகள் என்று கண்டித்துப் பேசி, பிரச்னையை மறைத்துவிடக் கூடும்.

இப்போது, அதற்கு வழியில்லை!

காங்கிரஸ் கமிட்டி உழவர்களுக்கு உதவி செய்யவில்லை, என்று குற்றம் சாட்டுபவர்களும், காங்கிரசார்!

இல்லை! இல்லை! என்று கூறி, மறுப்பவர்களும காங்கிரசார்!

இத்தகைய "பூணாரம் பூண்ட புதுமைகள்" ஏராளமாகக் காணலாம் நாட்டிலே, காங்கிரஸ் தவிர வேறு கட்சிகளே கூடாது, என்றும் கூறும்போக்கு, நடைமுறைத் திட்டமாக்கப்பட்டால்!

நெல்லூர் சம்பவத்தை கருத்தூன்றிக் கவனிக்க பிறகாவது, கருத்து வேற்றுமைகளை முறைப்படியும், ஒழுங்காகவும், நேர்மையுடனும், எடுத்துக்கூறும், ஜனநாயக முறையான, அரசியல் கட்சிகள் இருப்பதுதான் முற்போக்குக்கு அறிகுறி, என்பதை, வெற்றியால் விவேகத்தை மறக்கத்துணிந்துவிட்ட நண்பர்கள் அறிந்துகொள்ளவேண்டும். பிரேக் இல்லாத மோட்டார்போல, நிலைமை இருக்கவேண்டும் என்ற நினைப்பை நீக்கிவிட்டு, ஆளும்கட்சி அதன் போக்கைக் கவனிக்கும் அரசியல் பொறுப்பை வகிக்கும் மாற்றுக் கட்சி, என்ற ஜனநாயகமுறைவளர வழி செய்யவேண்டும். இல்லையேல், கட்சிகள் தனித்தனியே இருக்கும் நிலைமைக்குப்பதில, கட்சிக்குள்ளாகவே கட்சி, கமிட்டிகளுக்குள் கலகம், அவருக்கு இத்தனை ஆள், இவருக்கு இவ்வளவு ஆசாமிகள், என்றுள்ள காட்டுமுறை, தலைதூக்கி, அரசியலையும் பொதுவாழ்வையும், அநாகரீகமானதாக்கிவிடும். தியாகிகளாய், வீரர்களாய், விவேகிகளாய், உள்ளவர்களல்லவா, எங்கள் கட்சியினர் என்ற 'சுலோகம்' நெடுநாட்களுக்கும் பயன்படாது. அதிலும், கட்சிக்குள்ளாகவே, பூசல் விளையும் நிலையில், அந்தப் பேச்சுக்கே பொருள் இராது!!

* * *

"நான் மூன்றுமுறை சிறை சென்றேன்"

"ஆமாம்! நாலாவது தடவை மன்னிப்புக்கேட்டு ஓடிவந்துவிட்டாய்! தெரியுமே எனக்கு."

"உன்னைப்போல, கான்ட்டிராக்ட்டுக்காக அல்ல, நான் கட்சியில் சேர்ந்தது."

"மகாயோக்யன்தான், வாயை மூடப்பா! உன் மருமகனுக்கு வேலை தேடிக்கொடுக்க கதரைப்போர்த்துக் கொண்டவன்தானே நீ"

"மரியாதையாகப் பேசு!"

"அடக்கமாக நீ, பேசு"

"ஜாக்ரதை"

"உஷார்!"

"போடா, பிளாக்மார்க்கட்."

"வாயை மூடடா, வால்பிடிக்கும் வக்ரமே"

"உன்னை ஒழித்துவிட்டுமறுவேலை பார்க்கிறேன்"

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிட நாடு

காஞ்சி] 21—3—48 [ஞாயிறு

# திரு நாடு

## ஓர் அரும்பு

✻

தமிழ்நாடு, கேரளம், இரண்டும் ஒன்றாக்கப்பட்டு, ஸ்ரீ நாடு அல்லது வேறு ஏதேனும் பொருத்தமான பெயருடன், புதிய பெரிய மாகாணமாக அமைக்கப்பட்டால், அந்த மாகாணம், மிகப் பலம் வாய்ந்ததாகவும், செல்வாக்கு மிகுந்ததாகவும், விளங்கும் என்ற யோசனையை, K. J. ஜாகப் எனும் மலையாள நண்பர், மார்ச் 11-ந்தேதிய, "இந்து" பத்திரிகையில் வெளியிட்டுள்ளார்.

தனியாகக் கேரள மாகாணம் அமைக்கப்பட்டு, அதிலே திருவாங்கூரும், கொச்சியும் இணைக்கப்பட்டு புதிய அமைப்பு ஏற்படுமா என்று யோசிப்பதைவிட, கேரளமும் தமிழகமும் ஒன்றாக இணைந்து, பெரிய புதிய மாகாணமாக அமைவதற்கு வழிவகை உண்டா என்பது பற்றி ஆலோசிக்கவேண்டும் என்று அவர் கூறி இருக்கிறார்.

கேரளமாகாணம் அமைவது என்று ஏற்படுமானால், தென் திருவாங்கூர், தமிழகத்துடன் சேர்ந்துவிடும். இப்போது அங்கு நடைபெற்ற தேர்தல், இதனை உறுதியாக்குகிறது.

கொச்சியும் திருவாங்கூரும், மிகவும் இயற்கைச் செல்வம் படைத்த இடங்கள். கேரளத்தின் காடுகளும் சுரங்கங்களும், வளம் மிகுந்தவை. அதுபோலவே தமிழகமும் வளம் பொருந்தியது. கேரளம், எதிர்காலத்திலே, "இந்து மகாசமுத்திரத்திலே," சிறந்த செல்வாக்குடன் கூடிய கடற்படை பலம் வாய்ந்ததாக விளங்க வழி இருக்கிறது. தமிழகமும், கேரளமும், தனித்தனியாகி, இந்தச் செல்வாக்கு வளம் ஆகியவற்றின் கூட்டுச்சக்தியைச் சிதறடித்துக்கொண்டு இருப்பதைவிட, இரு இடங்களும், ஸ்ரீ நாடு என்ற புதிய பொது மாகாணமாக அமைக்கப்பட்டு விட்டால், கேரளத்தின் வளமும் தமிழகத்தின் வளமும் இருவருக்கும் சொந்தமான பொதுச் செல்வமாகி, இந்திய யூனியனிலேயே, பலமான மாகாணமாகத் திகழமுடியும்.

தென்இந்திய பாதுகாப்புக்கு, இப்படி ஒரு பலம் பொருந்திய மாகாணம் அமையவேண்டியது மிக மிக அவசியம். ஸ்ரீ நாடு மாகாணத்திலே, தமிழரும் கேரளரும் நேசப்பான்மையுடன் வாழ இயலும், ஏனெனில், பண்பாடு, இனம், எனும் துறைகளிலே, தமிழரும் கேரளரும், மிக நெருங்கிய தொடர்புடையவர்கள். மலையாள மொழியே, தமிழ் மொழியிலிருந்து திரிந்து, வடமொழிக் கலப்புடன் கூடிய மொழிதான். இரு இடங்களிலும், கலாச்சாரத் துறையிலே சுயேச்சையான நிலைமையை ஏற்படுத்திவிடமுடியும்—இருவரும் புதிய மாகாணத்திலே, நேசமாக வாழமுடியும்.

இவ்விதமானதோர் யோசனையை மலையாளத் தோழர் வெளியிட்டிருக்கிறார்.

ஸ்ரீ—என்ற பதம், வடமொழி. தமிழில், திரு என்பது, ஸ்ரீ என்று இருக்கிறது. ஆகவே நண்பர் கூறும் புதிய மாகாணத்துக்கு, தமிழ் மொழிப்படி, திருநாடு என்றுபெயர் அமைகிறது திருநாடு—திரு இடம்—திராவிடம்! எவ்வளவு அருகே நெருங்கி வருகிறார் என்பதைக்கவனியுங்கள்.

நண்பர் கூறுகிறபடி, தமிழகமும் கேரளமும் ஒரே மாகாணமாக அமையுமா, அமைக்கப்பட வேண்டுமா? மொழிவழி மாகாணங்கள் அமையும் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட இருக்கும் இந்த—நாட்களில், இது நடைமுறைத்திட்டமாவது கடினம். ஆந்திரம், மொழி, வழி அமையும்போது, தமிழகம் கேரளத்துடன் இணைந்து இருக்கவோ, திருவாங்கூரிலே ஒரு பகுதியாக நாஞ்சிநாடு இறுகப்பிணைக்கப்பட்டோ இருந்துவிடமுடியாது. எனவே நணபர் ஜாகப் வெளியிடும் இந்த யோசனை, மொழிவழி மாகாணம் அமையும் திட்டம் தோன்றுமுன்னம், வெளிவந்திருக்க வேண்டும்.

நண்பர் சில அடிப்படை உண்மைகளை மக்கள் முன்கொண்டுவந்திருப்பது கண்டு மகிழ்கிறோம்.

கேரளம்போல், மொழிவழி மாகாணங்கள் அமையினும் கூட, அவை, தனித்து இயங்கும் போது, சங்கடம் உண்டு, என்பதையும், தமிழகத்துடன்கூட்டாக இருந்தால்மட்டுமே வளமும் திறமும் கொண்டுவாழ இயலும் என்பதையும் நண்பர் உணர்ந்திருக்கிறார். இந்த அடிப்படை உண்மையை, உணர்ந்துள்ள ஆந்திரத் தலைவர்களும், கர்நாடகத் தலைவர்களும், பலர் இருக்கின்றனர்.

தென்இந்தியாவின்பிரத்யேகமான இயற்கை அமைப்பு முறையை நண்பர் ஜாடையாகச்சுட்டிக் காட்டியுள்ளார். பிரபல நூலாசிரியரும், அரசியல் நிர்வாகத்துறையிலே சிறந்த அனுபவம் பெற்றவருமான K. M. பணிக்கர்என்பவர், SOUTH AST ASIA தென்கிழக்கு ஆசிய அரங்கம் என்னும் ஆராய்ச்சி நூலிலே, எதிர்காலத்தில், இந்திய துணைக் கண்டத்துக்கான, பாதுகாப்புக்குத் தென்இந்திய கடற்படைத் தளமே, மிகச்சிறந்த பணியாற்ற வேண்டி வருமென்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார். இந்த உண்மையையே, இந்த நண்பரும் எடுத்துக்காட்டி, கடற்படைக்கான காரியமாற்றும் திறமும் வாய்ப்பும் தென் இந்தியாவுக்கு இருப்பதைச் சுட்டிக்காட்டி, இதற்காகத், தமிழகமும், கேரளமும், ஒன்றுபட வேண்டும் என்று கூறியுள்ளார்.

பொதுவாக, பல மலையாள நண்பர்கள் மறந்துபோயிருக்கும் மற்றோர் உண்மையை இந்த நண்பர் எடுத்துக்காட்டியது கண்டு, நாம் மகிழ்கிறோம். மலையாள மொழி, தமிழிலிருந்து பிரிந்ததே — வடமொழிக்கலப்புக்கொண்டு, மலையாளமாயிற்று என்ற உண்மையை, அவர் எடுத்துக்காட்டி இருப்பதுடன், கலாச்சாரம், இனம், எனும் துறைகளிலே, தமிழரும் மலையாளிகளும் ஓரே மூலத்தினர் என்பதை, நெருங்கிய தொடர்பினர் என்பதை விளக்கியது கண்டு, மகிழ்கிறோம். மலையாளிகள் மட்டுமல்ல, ஆந்திரரும் அதுபோலவே, ஓரே மூலத்தினரே — மொழிவழி பார்ப்பினும், இனவழி நோக்கினும், பண்பாட்டின்படி கவனிப்பினும். கன்னட மொழியினரும் அவ்விதமேதான் இந்த நான்கு பிரிவுகளும், ஓரே மூலமான திராவிடத்திலிருந்து, தோன்றியவைகளேயாகும். எனவேதான், எவ்வளவோ தந்திரமாகவும், பலகால்மாகவும்,

பல்வேறுமுறைகளாலும், உண்மை மறைத்து வைக்கப்பட்ட போதிலும், ஓரோர் சமயம், நண்பர் ஜாகப் போன்றவர்களின், உள்ளங்களிலே உண்மை உலவுகிறது. வேறு பல காரணங்கள் குறுக்கிடும்போது, உண்மையைப் பரணைக்கு அனுப்பி விடுகின்றனர்.

சின்னாட்களுக்கு முன்பு, மைசூர் முதலமைச்சரும், கர்நாடகம், ஆந்திரம், கேரளம், தமிழகம், ஆகிய பகுதிகள் ஒரு கூட்டாட்சியாக அமையக்கூடும், என்பது பற்றி, ஜாடைகாட்டிப் பேசி இருக்கிறார்.

அதற்குப் பல நாட்களுக்கு முன்னதாகவே, ஆந்திர நாட்டுத் தலைவர் தோழர் பட்டாபிசீதாராமய்யா, ஹைதராபாத் சமஸ்தானத்திலே, பொறுப்பாட்சி ஏற்பட்டுவிட்டால், பிறகு, ஆந்திரமும் ஹைதராபாத்தும், பிற தென்னிந்திய பகுதிகளும், ஒரு கூட்டாட்சி அமைப்பு ஏற்படுத்திக் கொள்வது கூட சாத்தியமாகக்கூடும், என்று பேசியிருக்கிறார்.

ஆக, திராவிடக் கூட்டாட்சி பற்றிய எண்ணம், பலருடைய மனதிலே, அரும்பத் தொடங்கிவிட்டது. ஆனால், பல்வேறு பகுதிகளிலே மக்களின் மனமும் தலைவர்களின் நோக்கமும், முதலிலே மொழி வழி மாகாணங்கள் அமைய வேண்டும் என்பதிலே, பதிந்திருப்பதால், கூட்டாட்சி என்ற திட்டம் முன்னணிக்கு வரவில்லை. மொழி வழி மாகாணங்கள் அமைவது உறுதிப்பட்டு, சிக்கல்கள் போக்கப்பட்டு, தமிழகம், கேரளம், கர்நாடகம், ஆந்திரம், என்று அமைப்புகள் ஏற்பட்டான உடனே. நண்பர் ஜாகப் போன்றவர்கள் வெளியிட்டுள்ளது போன்ற கருத்து, அரும்பியிருந்து மலராகி, வெற்றி மணம் வீசும் என்பதிலே சந்தேகமில்லை. இதனை நாம் முன்கூட்டியே கூறியதுடன், இதற்கான பிரச்சாரமும் புரிந்து, திராவிட நாடு என்ற இலட்சியத்தை மக்களிடம் பரப்பி வருவது, மாபெரும் துரோகமென்று கண்டிப்பவரும், கலைக்கு உதவாதது என்று கேலி பேசுவோரும், ஜாகப் போன்றவர்களின் கருத்தைக் கவனிக்கவேண்டும்—காற்று எந்தப் பக்கம் வீசுகிறது என்பதைக் கண்டறிய. அன்னிய ஆட்சியை அகற்றுவது என்ற திட்டம் வெற்றி பெற்ற உடன், அவரவர் மொழிவழி இடம் அமையவேண்டும் என்ற திட்டம், முன்னணி வந்திருக்கிறது—சகஜம்—ஆனால், அந்தத் திட்டத்தின் வெற்றியிலேயே நாம் குறிப்பிடும், திராவிடக் கூட்டாட்சியின் திட்டம் அரும்பெடுத்துவிடும் — ஆனந்தமானதோர் அந்தாதி போன்றது, இந்த அரசியல் பிரச்னை. பாரத்வர்ஷம்—வசீகரமான சொல்—இன்று தமிழகம், கேரளம், கர்நாடகம், ஆந்திரம் என்பவை வசீகரமான சொற்களாகிவிட்டன — ஆம் — ஆனால், திராவிடம் என்ற சொல், வசீகரமும் செல்வாக்கும், பெற்றுத் தீரும் என்பதற்கான அறிகுறிகள் தோன்றத் தொடங்கிவிட்டன. ஆகவேதான், ஸ்ரீநாடு — அதாவது திருநாடு என்ற புதிய மாகாணம் தேவை என்று கேரள நண்பரொருவர் கூறும் நிலைமையைக் காண்கிறோம்.

அவருக்கும் அவர் போன்றோருக்கும் ஒன்று கூறுவோம், மொழி வழி மாகாணங்கள், அமைவது என்ற திட்டம் வெற்றி பெற்றதும், கூட்டாட்சியே, நாம் குறிக்கோள், ஏனெனில், பண்பாடு, இனம், எனும் துறைகளிலே ஒரே மூலத்தினரான நாம், இயற்கையின் அமைப்பின்படி, கனிச் சிறப்புடன் விளங்க வல்ல தரணியைப் பெற்றிருக்கும் நாம், வேறு இடத்துக்கு வெள்ளாட்டி வேலை செய்துகொண்டிருக்கும், வகையற்றவர்களாக இருக்க முடியாது. திராவிட, அர்த்தமற்ற கூச்சல் என்று கருதும் அமைச்சர்களும் அறிய வேண்டுகிறோம்—அந்தச் சொல், இன்றைய சிருஷ்டி அல்ல, அரசியல் சூதாட்டக் காயுமல்ல, இழந்த இன்பத்தை, ஆனால் மீண்டும் பெற்றாகவேண்டிய இன்பத்தைக் குறிக்கும் இலட்சியச் சொல். அது, எளனத்தால் மாளாது, எதிர்ப்பால் மறையாது, எவரெவர் உள்ளத்திலேயோ உலவும், வளரும், வெற்றியைப் பெற்றுத் தரும், என்பது உறுதி. இன்று மொழி வழி மாகாணம் அமையவேண்டும் என்பதற்காகப் பாடுபடும் தலைவர்களிலே பலர், ஆகஸ்ட்டு 15-ந் தேதிக்கு முன்புவரையில், ஏகாதிபத்ய ஒழிப்பே எமது நோக்கம், மற்ற யாவும் எமக்கு முக்கியமல்ல என்று கூறினவர்கள், என்பதை மறக்கலாகாது. ஏகாதிபத்ய ஒழிப்பு வேலை முடிந்ததும், எனவே அவர்கள் மொழி வழி மாகாணம் அமைய வேண்டும் என்று இன்று கிளர்ச்சி செய்கின்றனரோ, அதுபோலவே மொழி வழி மாகாணம் அமைந்தான பிறகு, திராவிடக் கூட்டாட்சித் திட்டத்துக்குப் பணிபுரிய முன் வருவர்—பெயர் வேண்டுமானால், ஸ்ரீநாடு—தென்னாடு—தட்சிணம்—என்று ஏதோ சில மாற்றத்துடன் வெளிவரக்கூடும் — ஆனால், திராவிடம் எனும் இலட்சிய திட்டம், பட்டுப்போகாது. மொழி வழிமாகாணங்கள் அமைந்து, திராவிடக் கூட்டாட்சி அமையாமலிருந்தால், என்ன காண்பர்? தமிழரைக் கண்டு ஆத்திரப்படும் ஆந்திரரும், மலையாளிகளைக் கண்டு கோபிக்கும் தமிழரும், அவர்களைக் கண்டு மலைசப்படும் கர்நாடகரும், ஆகிய அனைவரும், தம் அனைவர் மீதும் வடவர், ஆதிக்கம் செலுத்துவதைக் காண்பர்—காணும் போது, இன்று கண்டனத்துக்கும் கேலிக்கும் உரியதாகக் கருதப்படும், திராவிடக் கூட்டாட்சித் திட்டம், அவர்கள் மனக்கண் முன் நிற்கும். பலருக்கு இந்நிலை வரச் சிலகாலம் பிடிக்கும், சிலருக்கு, இந்நிலை இன்றே ஏற்பட்டுவிட்டது—நண்பர் ஜாகப், அந்தச் சிலரில் ஒருவர்.

❋

12-ம் பக்கத் தொடர்ச்சி

இந்த உண்மையை, அவர்கள் முன்பு, உங்களிடமிருந்து மறைத்தனர். ஏன்? ஊராளத் தொடங்கிய உடனே முன்பு இருந்ததைவிட மும்மடங்கு அதிகமாக, பட்டாளத்துக்குச் செலவிடுகின்றனர். ஏன், முன்பு தூற்றினார்கள்? ஏன் முன்பு, பட்டாளச் செலவு அநாவசியம் என்று பேசினர்? ஏன், பட்டாளச் செலவைக் குறைத்து விடுவோம் என்று பசப்பினர்? திராவிடர் கழகத் தோழர் யாரும் காணாதிருக்கும் போதாவது, காங்கிரஸ் நண்பர்கள் இதுபற்றித் தமக்குள் உரையாடல் நடத்திப் பார்க்கவேண்டுகிறோம்—உண்மையைக் கண்டறியும் உயர்தரமான பொழுது போக்கு என்ற முறைக்காகவாவது!

### "அணையா விளக்கு"

சரித்திரச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு 'கவியின் கனவு' புகழ், S. D. சுந்தரம் அவர்கள் தீட்டியுள்ள, அணையா விளக்கு என்ற புதிய நாடகத்தை, விரைவில் திருச்சியில் நடைபெறும், K. R. ராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபையினர், நடத்த ஏற்பாடாகி இருக்கிறது.

# ★ சிரித்தார்களாம்! ★

—✲—

கோவைக் கோமான்களில் ஒருவரும், இந்தியப் பார்லிமெண்டில் இடம் பெற்றிருப்பவருமான, தோழர் T. A. ராமலிங்கம் செட்டியார், இந்தியாவுக்கு டில்லி, தலைநகராக இருப்பது சரியல்ல — தென்னாட்டுக்கும் தலைநகருக்கும் மிகமிகத் தொலைவு இருக்கிறது — தட்பவெப்ப நிலையும், மோசம் — எனவே, வேறு ஏதாவது, இந்தியாவின் நடுப்பாகத்தைச் சார்ந்த ஒரு இடத்தைத் தலைநகராகக் கொள்ளவேண்டும்'' என்று பேசினார், சென்றவாரம்.

தமது யோசனைக்கு ஆதரவு திரட்டுவதற்காக, அவர், விரிவாகவே காரணங்களை விளக்கினார்.

''தென்னிந்தியர்கள், தமது இடத்துக்கு மிகமிகத் தொலைவிலே உள்ள டில்லி, தலைநகராக இருப்பதை விரும்பமுடியாது. தென்னிந்தியர்கள் அலட்சியப்படுத்தப்படுகின்றனர் என்றும் தென்னிந்தியர்களை, பஞ்சாபிகள் வென்றுவிட்டார்கள், என்று எண்ணச் செய்கிறது'' என்று பேசினார். உடனே மன்றத்திலிருந்தவர்கள் சிரித்தார்களாம்.

''சிரிக்கக் கூடிய விஷயமல்ல இது நண்பர்களே! என்று ராமலிங்கனார் கூறிவிட்டு, டில்லி மகாத்மீயத்தைப் பற்றி மேலும் சில கூறலானார்.

கேளுங்கள் நண்பர்களே! இங்குள்ள பத்திரிகைகள், சின்னாட்களுக்கு முன்பு மதருசிகளை முதலில் கவனித்துவிட்டு, பிறகு மராட்டியரைக் கவனிக்கவேண்டும். மதருசிகளை மதருசுக்குத் துரத்தவேண்டும், என்றெல்லாம் எழுதின'' என்று கூறினார்.

பார்லிமெண்டில் கூடியிருந்தவர்கள், மீண்டும் சிரித்தார்கள்!

இந்தக் காரணங்கள் போதாது என்று, வேறொன்றும் சொல்லிப் பார்த்தார்.

''டில்லி, பாகிஸ்தானுக்கு 150-மைலில் இருக்கிறது. இதுவரை, வடமேற்குக் கணவாய் வழியாக நடைபெற்ற படையெடுப்புகளின் போதெல்லாம், டில்லி தாக்கப்பட்டது. இந்தியாவின் மற்றப் பாகங்களைவிட, டில்லி நகரமே இந்தப் படையெடுப்புகளின்போது அதிக முறைகள் தாக்கப்பட்டது என்று கூறிப் பார்த்தார்.

பலன் என்ன? டில்லி வேண்டாம்—வேறு ஏதேனும் நகரம், வார்தா, நாகபுரி, இப்படி ஏதேனும் இடம் தலைநகராகக் கொள்வோம் என்று, பார்லிமெண்ட் கூறிற்றா? கூறுமா? புதுடில்லியை மேலும் அழகுபடுத்த 8½ கோடி ரூபாய் செலவிடுவதென்றுள்ள தீர்மானத்தை, கோவைத் தோழரின் கோரிக்கைக்குப் பிறகு, அமுல் நடத்தவே உறுதி கொண்டனர். கோவையார் பேச்சுக்குக் கிடைத்த பரிசு, பதில் சிரிப்பு! ஆம்! சிரித்தார்கள்! சிரிக்காமல் என்ன செய்வார்கள்? சிரித்ததிலே என்ன தவறு!

''யார் இந்த ஆசாமி? எப்படியோ, பார்லிமெண்டிலே இடம் கிடைத்தது, நம்மில் ஒருவராக அமர்ந்துவிட்ட காரணத்தாலேயே, நமக்கு யோசனை கூறும் நிலைமை தனக்குள்ளதாக நினைக்கிறாரே.'' என்று எண்ணிச் சிரித்துத்தான் இருப்பார்கள்.

புதுடில்லியிலே மதருசிகளைக் கேலி செய்கிறார்கள், வெறுக்கிறார்கள், விரட்ட வேண்டுமென்று கூறுகிறார்கள் என்று பேசி, அதற்காக, தலைநகரை மாற்றவேண்டும் என்று கூறுகிறாரே இந்த 'விசித்திர மனுஷர்,' புதுடில்லி மட்டுந்தானா, வடநாட்டிலே, எந்த ஊரிலே இந்த மதருசிகளை மதிக்கிறார்கள். எங்கும் மதருசி வாலா கேலிக்குரியவன் தானே,'' என்று எண்ணிச் சிரித்திருப்பார்கள்.

அவர்கள் சிரித்ததிலே தவறொன்றுமில்லை, கோவையார், கோபித்துப் பயனுமில்லை. தமது பேச்சு, அந்த மன்றத்திலே ஏறாது என்பதை அறியாமல், பேசியது தவறே தவிர, அவர்கள் சிரித்ததில் தவறு என்ன இருக்க முடியும்! இந்திய அரசைக்கட்டி ஆளும் பொறுப்பும், இந்திய அரசின் அங்கங்களைத் தங்கள் இஷ்டம்போல் ஆட்டிப் படைக்கும் அளவு அதிகாரபலமும், தென்னாடு முழுவதையுமே, பட்டிக்காடாக்கிவிடக்கூடிய அளவு, தொழில்வள ஒங்கி ஏற்பாடு தீர பலத்தைத் அதிகரிக்கும் சீமையாக்கிவிட்ட நிலையும் பெற்று ஏகாதிபத்யக் கோலம் பூண்டுள்ள வடநாட்டாரின் முன்பு, தலைநகர் எங்கள் ஊருக்கு வெகு தொலைவில் இருக்கிறது, ஆகவே டில்லி வேண்டாம என்று இவர் பேசினால், சிரிக்காமலிருக்க முடியுமா, சீமைத் துரைகளையே, ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளும் அளவுக்குச் சீமான் நிலை பெற்றுவிட்டவர்களால்

பழய கந்தை—கரையில் உள்ள சாயம் போய்விடுமா சாமி! என்று இனம் கொடுக்கும் மிராசுதாரரிடம் கேட்கிறான் உழவன். அப்போது மிராசுதாரர், சிரிக்காமலிருக்கிறார? வெறுவது பழங்கந்தை—இதிலே கொஞ்ச ராங்கியா?— என்று அந்தச் சிரிப்பு, கூறுகிறதல்லவா?

சகல அதிகாரத்தையும் ஒப்படைக்கச் சம்மதித்துவிட்டு, தொழில் துறையிலே அவர்களைத் துரைகளாக உயர அனுமதித்துவிட்டு, அவர்களின் தயவிலே 'துபாஷ்' வேலை கிடைத்தால் போதும் என்று எண்ணிக் கொண்டுள்ள, நிலையில், இவர், தலைநகரை மாற்றவேண்டுமென்று பேசுவது கேட்டால், அவர்களுக்கென்ன, நமக்குக் கூடத்தான் சிரிப்பு வருகிறது. எவ்வளவு பைத்யக்கார மனிதரய்யா இவர். இந்தியாவின் அரசியல் திட்டத்தை வகுத்திருக்கிற முறையைக் கவனிக்காமல, பல வலிய்ந்த மத்தியசர்க்கார் என்ற சாக்குக்கூறிக் கொண்டு, மாகாணங்களை, ஜில்லாபோர்டுகளின் நிலைமைக்குக் கொண்டு வந்து விடத் திட்டமிட்டு எதற்கும் மத்தியசர்க்காரின் அடிபணிந்தால்தான் முடியும் என்ற நிலையை ஏற்படுத்துகிறார்கள், இந்தக் கேடுகளைய, சிறு விரலையும் அசைக்காமல், மாகாணத்தின் ஜீவநாடிகளை உங்களிடம் ஒப்படைத்துவிட்டு, நாங்கள் எவ்விதத்தில் முன்னேற முடியும், என்று கேட்கத் துணிவின்றி, வாதாடவுகையின்றி, வாய் மூடிக்கிடந்துவிட்டு, தலைநகர் அமைந்திருக்கிற இடம் சரியில்லை என்று, பேசினால், சிரிப்பு, வராமலா இருக்கும்—அவர்களுக்குச் சிரிப்பு வருகிறது—நமக்குச் சிரிப்பும் அழுகையும் சேர்ந்து வருகிறது. பந்தியிலே இடம் இல்லை, உட்கார்ந்திருப்பவர்களைப் பார்த்துக்கொண்டு, இலை பொத்தல் என்று கூறின ஏமாளியின் கதைதான் நமக்குத் நினைவுக்கு வருகிறது. அதை உதாரணமாகக் கூறினால், கோவையார் நம்மீது கோபம்வரும்.

(அடுத்த பக்கம் பார்க்க)

# பரதாழ்வார்—பாபா

★

"எவ்வளவு காலம் இந்த ஓட்டல் சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருப்பது. வீண் செலவு. வாய்க்கு ருசியும் இருப்பதில்லை. உடல் நலமும் பாழாகிறது. என்னதான் சொல்லுங்கள், வீட்டுச் சாப்பாடு என்றால், அது தனி இன்பந்தான். வடை—பாயாசத்தோடு கூட வேண்டாம், ஏதோ ஒரு வறுவல், ஒரு துவையல், ரசம், மோர், போதும்" என்றார், கவலையுடன், பரதாழ்வார்.

இந்தப் பேச்சுக்கு அவருக்குப் பல இடங்களிலிருந்து அனுதாபம் கிடைத்தது. பலரும் பரதாழ்வார் கூறுவது சரி என்று ஒப்புக்கொண்டனர். அவர் குறையைப் போக்கவும் முனைந்தனர். அவருக்குத் திருமணம் நடந்தேறியது.

"இனி, பரதாழ்வாருக்குச் சங்கடம் இல்லை. வீட்டுச்சாப்பாடு—அன்புடன் மனைவி பரிமாற, பரதாழ்வார், உண்டு களித்து வாழ்வார்" என்று நண்பர்கள் பேசிக் கொண்டனர்.

திருமணம் முடிந்து சில நாட்களுக்குப்பிறகு பரதாழ்வார், முன்பு பழக்கமான சீமா ஓட்டலுக்கு வந்தார்—கையில்பாத்திரத்துடன் முதலில், தான் சாப்பிட்டுவிட்டு, பிறகு, பாத்திரத்தில் 'சாப்பாடு' எடுத்துக் கொண்டு, வீடு சென்றார், "பாரியாளுக்கு!"

"இதென்ன ஓய், வேடிக்கை! ஓட்டல் சாப்பாடு உடம்புக்கு ஆகாது—செலவும் அதிகம்—என்று அழுது கொண்டிருந்தீர். கலியாணம் இந்தக் குறையைப் போக்கவே செய்து கொள்வதாகச் சொன்னீர். கலியாணம் செய்து கொண்டபிறகு, பழயபடி ஓட்டலில் சாப்பிடுவதுடன்கூட, வீட்டுக்கும் சாப்பாடு ஏந்திச் செல்கிறீரே" என்று நண்பர்கள் நையாண்டி செய்தனர்.

"என்னசார், செய்வது. அவளுக்கு அசக்தி. வேலை செய்ய முடியவில்லை. அவளைக் கஷ்டப்படுத்த இஷ்டமில்லை அதனால்தான்,……………………" என்று கூறிவிட்டு, ஒரு அசட்டுச் சிரிப்புடன் பரதாழ்வார், வீடு நோக்கி நடந்தார்.

* * *

சிரிக்கிறீர்கள்! பல இடங்களில் இதுபோல் நடந்ததுண்டு என்றும் பேசிக்கொள்கிறீர்கள், அல்லவா. போதும் சிரிப்பு. நான் சொன்னது, வெறும் கதை அல்ல, பெரிய இடத்து விவகாரம், நீங்களும் நானும் கேலிசெய்து சிரிப்பது தெரிந்தால், சீறுவார்கள்.—சங்கடம் நமக்கு. பெரிய இடம், என்றால் மிகைபடக் கூறியதல்ல, நான் குறிப்பிடுவது, இந்திய சர்க்காரை!

* * *

வளமும் வசதியும், பொருளும் புத்தியும் ஏராளமாக இருந்தும், இந்த நாடு அன்னிய ஆட்சியிலே இருந்த காரணத்தால் தொழில் வளம் குன்றி, மூலப்பொருள்களை வெளி நாட்டுக்கு அனுப்பிவிட்டு, நாட்டுத் தொழிலாளர்களை முடவர்கள் போலாக்கிவிட்டு, எந்தச் சாமானுக்கும், வெளிநாட்டுத் தயவை எதிர்பார்த்துக் கொண்டு, பெரும் பொருளைச் செலவிட்டு, நாடு நசித்து விடுகிறது. அன்னிய ஆட்சியினால் விளையும் பயங்கரமான கேடு இது, வெண்ணெயைத் திரட்டி வெளியானிடம் கொடுத்துவிட்டு, நெய் தரும்படி, அவனைக் கெஞ்சுகிறோம். இந்தக் கேவல நிலைமை ஒழிய வேண்டாமா? நமது நாட்டுத் தொழில் வளரவேண்டாமா? நம்மால், எதைச் சாதிக்க முடியாது, எந்தப் பொருளைத்தான் செய்ய முடியாது. அன்னிய ஆட்சி ஒழிந்து சொந்த ஆட்சி ஏற்பட்டுவிட்டால், இவ்விதம் பிற நாட்டின தயவில் பிழைக்கும் கேவலம் ஒழிந்து போகும். நமக்குத் தேவையான பொருள்களை, நமது நாட்டில், நமது மக்களைக்கொண்டு, நம்மால் தயாரித்துக் கொள்ள முடியும். நமது நாட்டு மதிப்பு ஓங்கும்—தொழில் வளரும்—செலவும் குறையும்"—என்றெல்லாம் பேசினர், காங்கிரஸ் தலைவர்கள், பல ஆண்டுகளாக, பன்னிப் பன்னி!

சுயாட்சி மலர்ந்து விட்டது.

மார்ச் 2ந்தேதி, இந்திய சர்க்காரிலே, வியாபார மந்திரியாக உள்ள தோழர் பாபா, கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் பரதாழ்வார் போல பேசியிருக்கிறார்.

இந்த வருஷம், அமெரிக்காவிலிருந்து 7895 டன் எஃகு, வாங்கப் பட்டிருக்கிறது.

டன் 72 டாலர் விதம் 70,000 டன், தண்டவாளங்கள், அதனுடன் சம்பந்தப்பட்ட சாமான்கள் ஆகியவை, கனடா நாட்டிலிருந்து வாங்கப்படுகிறது.

இந்தச் சாமான்கள், இந்தியாவில் இதே சாமான்களுக்கு உள்ள விலையை விட அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டுள்ளன. ஏனெனில் இங்கு இத்தகைய சாமான் குறைவாக இருக்கிறது.

மந்திரி பாபாவின் பேச்சுக்கும், நான் குறிப்பிட்ட பரதாழ்வார் பேச்சுக்கும், வித்யாசம் அதிகம் உண்டா? இல்லையல்லவா! ஆனால், தயவுசெய்து கேலியாகப் பேசிவிடாதீர்கள், இது, பெரிய இடத்து விவகாரம்!!

சிரித்தார்களாம்!

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கிலுல், கைகொட்டிச் சிரிக்காரோ — என்று பாரதியார் பாடினரே, அந்த நிலையுடுமை றோப. மாகாணங்களின் பொறுப்பாக இருக்கவேண்டிய சகல அதிகாரங்களையும், மத்தியசர்க்காரிடம் கொடுத்துவிட்டு, மண்டியிட்டு வாழ மனம் சம்மதிக்கும் இந்த மகானுபாவர்களுக்கு டில்லி, தலைநகராக இருப்பது மட்டுந்தானு, பிடிக்கவில்லை! சிரிக்காமல் என்னசெய்வது?

---

7-ம் பக்கத் தொடர்ச்சி

"பெரிய சூரப்புலி! உன்கையிலே தானே காங்கிரஸ் தலைவர்கள் இருக்கிறார்கள்!!"

"பார், உன்னைக் காங்கிரசிலிருந்து விலக்கிவைக்காவிட்டால்—"

"இந்தக் கமிட்டியையே நான் கலைத்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன்"

"படேலுக்குத் தந்தி கொடுத்து ……………………"

"உன்னால் ஆனதைப்பார். நான் நேரடியாகவே நேருவைப் பார்க்கிறேன்"

இப்படிப்பட்ட "சம்பாஷணைகள்" எலூர்போன்ற 'சம்பவங்கள்' நண்பர்கள் கூறும், ஒரேகட்சி அரசு முறையிலே, பவித்துண்டு. நாடு, இந்த நிலையை விரும்புகிறதா? கலவரங்களை விரும்புமா?

## எல்லைக் காந்தி

எல்லைக்காந்தி, கான் அப்துல் கபார்கான், பாகிஸ்தான் ஏற்படவொட்டாதபடி தன் செல்வாக்கினால் தடுப்பார் என்று பலமாகப் பிரசாரம் செய்யப்பட்டது. ஆனால், ஆருடம் பலிக்கவில்லை. பிறகு, பாகிஸ்தான் ஏற்பட்டானதும், எல்லைக் காந்தி, தன் தொண்டர்படையினை ஆயிரக்கணக்கிலே திரட்டிக் கொண்டு, பாகிஸ்தானை முறியடிப்பார், என்று, பேசப்பட்டது. அவ்விதம் ஏதும் நடைபெறவில்லை. பாகிஸ்தானுடன், எல்லைக்காந்தி ஒத்துழைக்க மாட்டார், அவர் தன் சகாக்களைத்திரட்டிக் கொண்டிருக்கிறார், பட்டாணிஸ்தான் கிளர்ச்சிக்குப் பலமானதோர் திட்டம் வகுத்துக்கொண்டிருக்கிறார், என்றுபேசப்பட்டது. ஆனால், பாகிஸ்தானுக்கு நான் விரோதியல்ல என்று எல்லைக் காந்தி கூறிவிட்டதுடன், பாகிஸ்தான் அரசியல் நிர்ணயசபையிலும் கலந்து கொண்டார். பாகிஸ்தானுக்குள்ளாகவே, எல்லைப்புற மாகாணத்துக்குப் பலமும்வளமும் தரத்தக்க அரசியல் அமைப்பு ஏற்படச்செய்வதே இனித்தமது முன்னணிவேலை என்று கூறிவிட்டார். பாகிஸ்தான் சட்டசபையிலே அவர் பாகிஸ்தான் மக்கள் கட்சி என்ற தீவிரநோக்கம் கொண்டதோர் அரசியல் கட்சியை அமைத்துக்கொண்டு பணிபுரியத் தொடங்கி விட்டார். பாகிஸ்தானை, முஸ்லீம் முதலாளிகளும், காட்டு ராஜாக்களும், முல்லாக்களும், தங்கள் வேட்டைக்காடு ஆக்கிக் கொண்டு, தர்பார் நடத்தத் திட்டமிடும் வேளையில், முற்போக்குக் கொள்கையும், தியாக உணர்ச்சியும் கொண்ட எல்லைக்காந்தி, புதியதோர் கட்சி ஏற்படுத்தியது, உண்மையிலேயே, சிறந்த காரியமாகும். பாகிஸ்தானில் மக்களின் உரிமையும் நலனும், எல்லைக்காந்தியின் புதிய கட்சியினால் காப்பாற்றப்பட்டு, பிற்போக்கு வாதிகளின் சூழ்ச்சித்திட்டங்கள் முறியடிக்கப் பட்டுவிடும், என்று நம்புகிறோம். கடைசிவரை, பாகிஸ்தானுடன் பகையைவளர்த்துக்கொண்டிராமல், ஏற்பட்டுவிட்ட அமைப்புக்குள் இலட்சியசித்திக்கான வகையிலே பணியாற்ற முன் வந்த, யூகத்தையும் நல்நோக்கத்தையும் பாராட்டவேண்டும். பாகிஸ்தானுக்கு வெளியேயுள்ள முஸ்லீம் தலைவர்களும், இதுபோன்றே, ஏற்பட்டுவிட்ட இந்திய அரசியல் அமைப்புக்குள், புதிய நோக்கம் கொண்ட அரசியல்கட்சி அமைப்பதே சரியான வழியாகும். பழயலீக் பழயபடியே இருக்கவேண்டும் என்று எண்ணுவது, அர்த்தமற்ற காரியம், அவசியமற்றசெயல். இதனை, வங்காள முஸ்லீம் தலைவர் சுஹ்ரவர்தியும் வலியுறுத்திக்கூறினர். இருந்தும், சென்னை மாகாணத்திலே, சிலருக்கு மட்டும், பழயபடி முஸ்லீம் லீக் என்று கட்சி இல்லாவிட்டால், ஏதோ 'கௌரவம்' குறைந்துவிடும், என்றதவறான எண்ணம் ஏற்பட்டு விட்டது. எனவே அவர்கள் லீகைக்கலைக்க முடியாது என்று கூறுகின்றனர். தலைவர்கள் சிலர், லீகைக்கலைக்க மறுக்கலாம், ஆனால் நாம் அறிந்த அளவில் முஸ்லீம் பொதுமக்களின் போக்கைக் கவனிக்கும்போது, லீக் கலகலத்துவிட்டது என்றே தெரிகிறது. இதிலே, வருத்தப்படவோ வெட்கப்படவோ ஒரு காரணமும் இல்லை. எல்லைக்காந்தியின் இன்றையபோக்கைக்கண்டாவது, பாடம் கற்றுக் கொள்ளவேண்டும். இப்போதைய நிலைமையில், இங்கு, முஸ்லீம் லீக் என்ற பெயருடன் ஒரு அரசியல் கட்சிக்கு அவசியமே இல்லை, முஸ்லீம்கள் வேறுபலருடன்கூடி, எல்லைக்காந்தி அமைத்ததுபோல புதிய இலட்சியங்கள் கொண்ட அரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொள்வதே சிலாக்கியமான காரியம். எந்தவகையிலே பார்த்தாலும், எல்லைக்காந்தியின் செல்வாக்கு, இஸ்மாயில்களின் செல்வாக்கைவிட, அதிகமான அளவினதுதானே. எல்லைக்காந்தியே, பாகிஸ்தானுடன் பகைத்துக்கொள்ளும், பழயபாணி வேண்டாமென்று தீர்மானித்து, புதிய அரசியல் கட்சி அமைக்கும்போது, இங்குமட்டும் ஏன் பழயலீக் என்பதை இங்குள்ள முஸ்லீம் தலைவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

### ராணுவச் செலவு

இந்தியாவின் ராணுவச் செலவுக்காக, இந்த வருஷ பட்ஜட்டில், 136 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறது.

முன்பு—அந்நிய வெள்ளை சர்க்கார் ஆட்சி நடந்தபோது ராணுவச் செலவு, 45 கோடி ரூபாய்: மொத்த இந்தியாவுக்கு.

இவ்வளவு அதிகமாக ஏன் சுயராஜ்ய சர்க்கார், ராணுவத்துக்குச் செலவிடுகிறது?

அஹிம்சையைப் பற்றிய தத்துவத்தை அலசி அலசிக் காட்டியவர்களின் ஆட்சியிலே, 136கோடி ரூபாய் பட்டாளத்துக்குச் செலவிடலாமா? என்றெல்லாம், கேட்கலாம்—ஆனால் நாட்டு நிலைமையையும், உலக நிலைமையையும் அறிந்திருக்கும் பொறுப்புணர்ச்சி காரணமாக, இந்தக் கேள்விகளைக் கேட்காமலிருக்கிறோம். ஆட்சியாளர்களுக்கு ஒன்று கூறுவோம், ஆளவருவதற்கு முன்பு பேசியபேச்சின்படி, நடந்துகொள்ள முடியவில்லை, என்பதையாவது உணருங்கள்.

பொதுமக்களுக்கும் ஒருவார்த்தை. ஏகாதிபத்திய சர்க்கார், ஏழை மக்களிடமிருந்து பலவகையிலும் வரி, வரி, என்று பணத்தை அறித்து எடுத்துக் கொண்டு போய், பெரும்பகுதியைப் பாழாய்ப்போன பட்டாளத்துக்கே செலவிட்டு விடுகிறது என்று இடிமுழக்கமிட்டனரே, இதே காங்கிரஸ் தலைவர்கள், கவனமிருக்கிறதா! நாங்கள் ஆட்சி புரியத் தொடங்கினால், முதல் வேலை, இந்தப் பட்டாளத்தின்பேரால் பணம் பாழாவதைத் தடுப்பதுதான்—சரிபாதியாகவேனும், பட்டாளச் செலவைக் குறைத்து விடுவோம், என்று நாட்டு மக்களுக்கு, இதே காங்கிரஸ் தலைவர்கள் நல்வாக்குக் கொடுத்தனர், நினைவிருக்கிறதா? அவர்கள்தான் இன்று ஆட்சி நடத்துகிறார்கள்—136 கோடி ரூபாய் செலவிடுகிறார்கள் பட்டாளத்துக்கு.

பழய பேச்சைப்பற்றி, எண்ணிப் பார்க்கும்போது, என்ன தோன்றுகிறது, உங்களுக்கு?

வெட்கமாக இருக்கும், வெளியே சொல்ல—சொல்லவேண்டாம்—சிந்தித்தால் போதும், சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தம் இல்லை என்பது பற்றி.'

இதனை நாம் எடுத்துக் கூறுவதால் பட்டாளத்துக்குப் பணம் செலவிடுவது கூடாது என்று பேசுவதாக எண்ண வேண்டாம். நாம், அப்போதும் அந்த வேதாந்தம் பேசியதில்லை, இப்போதும், பேசவில்லை.

ஒரு பெரிய துணைக்கண்டத்துக்கு, சுற்றிலும் பலவல்லரசுகள் கழுகுப் பார்வையுடன் உள்ள நிலையில், படைபலம், போதுமான அளவு, நிச்சயமாக இருக்கத்தான் வேண்டும்.

(9-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்ச்சி

கலகம் செய்த பேர்வழி, எனக் கோர்ட்டிலே தீர்ப்பாகிவிட்டது. இது என்ன உலகம் என்று மனங்கசிந்தான். நானே, சூழ்ச்சிச் சுழலில் சிக்கித் தப்ப முடியாமற் போய்விட்டதே, என் படிப்பு, உயர்குடும்பம், புத்தி, நிலைமை, எதுவும், வஞ்சகத்தின் முன்பு நிற்கவில்லையே! அபலையாகிய விமலா வாழ்க்கையிலே எவ்வளவு வஞ்சனையைக் கண்டாளோ, எந்த வஞ்சகன் அவளைக் கெடுத்து இந்நிலைக்குக் கொண்டுவந்தானோ என்று நினைத்தான். விமலாவைக் கண்டுபிடித்து, அவளிடமிருந்து சேதியைக் கேட்டால்தான், தன் மனமே சாந்தமடையும் எனத் தோன்றியது. மரகதத்தின் வீட்டுக்குச் சென்று விசாரித்தான். அவளோ தனக்குத் தெரியாது என்று கூறிவிட்டாள். கடைசியில் வேலைக்காரியைப் பிடித்து, விலாசம் தெரிந்துகொண்டான். விமலாவின் வீட்டுக்குச் சென்றான்.

* * *

விமலா, பாடிக்கொண்டிருந்தாள். உருக்கமான பாடல். பல பெரிய மனிதர்கள் பாட்டைக் கேட்டுக்கொண்டிருந்தனர். சுந்தரேசனைக் கண்டதும், விமலா, "உட்காருங்கள்" என்று ஜாடை காட்டினாள். விமலா இவ்வளவு நன்றாகப் பாடுவாள் என்று சுந்தரேசனுக்குத் தெரியாது. பாட்டுக் கேட்டவர்களும் "சபாஷ்" சோகரசமும் இருக்கிறது, பேச்சு ஸ்வாரஸ்யமும் இருக்கிறது, மேக்கப் செய்துவிட்டால் உருவமும் நன்றாகத்தான் இருக்கும், என்று ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டனர். அவர்கள், சினிமாப்படம் எடுப்பவர்களென்றும், விமலாவை ஒரு படத்திலே நடிக்க அழைக்கவே வந்திருப்பதாகவும் சுந்தரேசனுக்கு, விமலா கூறினாள். "இவர் டாக்டர் சுந்தரேசன், என் நண்பர், என் விஷயத்திலே ரொம்ப அக்கரை. நீங்கள் மேற்கொண்டு பேசவேண்டியதை அவரிடமே பேசி முடிவு செய்துகொள்ளலாம்" என்று விமலா கூறிவிட்டாள்.

3000 ரூபாய் கொடுப்பதென்றும் விமலா படத்தில் கதாநாயகியாக நடிப்பதென்றும் படம் ஏழு மாதத்திலே முடியுமென்றும் சினிமாக்காரர்கள் கூறினர். சுந்தரேசனுக்கு அளவற்ற ஆனந்தம். வறுமையிலே வாடிக்கிடந்த விமலாவுக்கு இனி நல்ல காலந்தான் என்று எண்ணி மகிழ்ந்தான். ஒப்பந்தப் பத்திரத்திலே தானே ஒரு சாட்சிக் கையெழுத்திட்டான். அட்வான்சாகத் தந்த 500 ரூபாயை சினிமாக்காரரிடமிருந்து வாங்கி, அகமெல்லாம் மகிழ விமலாவிடம் தந்தான்.

சினிமாக்காரர்கள் விடை பெற்றுக்கொண்டு போகுமுன்னம் சுந்தரேசனுக்கு ஒரு யோசனை பிறந்தது, "ஏன் சார்! என்ன கதை!" என்று கேட்டான்.

"கதையா? என் கதையே பெரிய கதையாக இருக்குமே" என்றாள் விமலா.

"ஆமாம்! நான் விமலாவின் உண்மைக் கதையை சினிமாவுக்குத் தகுந்தபடி எழுதித் தருகிறேன்" என்றான் சுந்தரேசன்.

"சபாஷ்! ரொம்ப சரி சார்! கதையை ஒரு மாதத்துக்குள் கொடுத்துவிடவேண்டும்" என்று சினிமாக்காரர் கூறினர். சுந்தரேசன் பரமானந்தமடைந்தான். "இந்தக் கதையிலே உலகத்தின் மோசத்தை விளக்கி விடுகிறேன். விமலாக்களை உற்பத்தி செய்யும் சமூகத்திற்குச் சரியான சவுக்கடி தந்துவிடுகிறேன்" என்று விமலாவிடம் கூறினான். சந்தோஷ மிகுதியால் விமலாவைப் பிடித்துக் குலுக்கினான். அவள் தவடையைப் பிடித்துக் கிள்ளினான். விமலாவுக்கும் ஆனந்தமே! அவளும் "ஏது டாக்டரே மகா ஷோக் பேர்வழியாகி விட்டீரே" என்று கேட்டாள்.

"சந்தேகமா உனக்கு! மகா ஷோக் பேர்வழிதான், என்பதற்குக் கோர்ட்டிலேயே தீர்ப்புக் கிடைத்திருக்கிறது" என்று ஆரம்பித்து, சுந்தரேசன், தனக்கு நேரிட்ட விபத்தைக் கூறினான். விமலா, விழுந்து விழுந்து சிரித்துவிட்டு, "இதுதான் டாக்டர் உலகம்; உலகம் இதுதான். சூது, வஞ்சனை, சூழ்ச்சி, மோசம், நிரம்பிய உலகம். ஒருவரை ஒருவர் வஞ்சகத்தாலேயே வீழ்த்த வேண்டுமென்ற எண்ணமே பெரிதும் குடிகொண்ட உலகம். ஆண்டு அனுபவிக்க வேண்டும், ஆனால் அதனால் தங்களுக்கு ஒரு தொல்லையோ, கஷ்டமோ, வெறுப்போ இருக்கக்கூடாது என்று எண்ணும் உலகம். ரோஜா புஷ்பம் வேண்டும், ஆனால் அதிலே முள் இருந்தால் பயம்! தேன்குடிக்க வேண்டுமென்று ஆசை, ஆனால் வண்டு கொட்டுமே என்ற பயம். இவ்விதமாகப் போகத்தில் மட்டும் ஆசையும், அதை அடைந்தால், அதற்காக வரும் கஷ்ட நஷ்டத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் சுபாவமும் மனிதர்களிடத்திலே இருப்பதால்தான் டாக்டர், தாசிகள் என்ற வகுப்பே தோன்றிற்று. ஆமாம்! நீங்கள் நம்பத்தான் மாட்டீர்கள். நான் நேசித்த ஒருவன் என்னை மணம் செய்துகொண்டிருந்தால் நான் விஷய உதட்டுடன் உங்களிடம் வந்திருக்கவே மாட்டேன்" என்று விமலா கூறினாள்.

"காதல்கூடக் கொண்டிருந்தாயா விமலா" என்று சுந்தரேசன் கேட்டான்.

"நல்ல கேள்வி கேட்டீர் டாக்டரே! ஏன், எனக்குப் பசி தாகம் உண்டா என்று கேட்பது தானே" என்றாள் விமலா! "தாசிகளுக்குக் காதல் ஏது விமலா! நீ கோபிக்கக் கூடாது" என்று சுந்தரேசன் கேட்டான். "கோபம் என்ன இருக்கிறது. உலகத்திலே எத்தனையோ பேர் இதைத்தான் கேட்பார்கள். சகஜமான கேள்விதான். ஆனால், காதல் என்பதன் கருத்துத் தெரியாமல் பேசும் பேச்சு இது" என்றாள் விமலா! சிறிது நேரத்திற்குப் பிறகு, "டாக்டரே காதல் என்பது இருவர் மனது லயிப்பது அல்லவா! சுருதியில் சேர்ந்த சங்கீதம் போன்றது. மலரில் மணம் இருப்பது போன்றது. மதியில் குளிர்ச்சி இருப்பது போன்றது. எனவே இருவர் வேண்டுமே காதலுக்கு, தாசிகளிடம் சேரும் புருஷர்களிலே யார், தங்கள் முழு மனதையும், தங்கள் வாழ்வையும் ஒப்படைப்பார்கள்? தாசி வீடு வருவதே கேவலம் ஆம்! பச்சைச் சிரிப்புச் சிரிக்க வேண்டாம். உமக்கு மட்டும் என்ன, இப்போது நல்ல பெயர் என்றா நினைக்கிறீர். கூத்தி குடி எல்லாம் டாக்டருக்கு உண்டு என்றுதான் ஊரிலே பேச்சு" என்று விமலா கூறி முடிப்பதற்குள், டாக்டர் "இரண்டும் எனக்குக் கிடையாது" என்று கூறினார். "அது சரி! அது உம்மனதுக்குத் தெரியும். ஊராருக்கு என்ன தெரியும்" என்று விமலா கேட்டான், "முட்டாள்தனமாகப் பலர் பலவிதமாகப் பேசினால் அதுபற்றி எனக்குக் கவலையில்லை" என்றான் சுந்தரேசன். "பேஷ்! நீங்கள் எண்ணுவது போல, முந்தி எண்ணியிருந்திருந்தால் நான் இந்த நிலைக்கு வந்தே இருக்கமாட்டேன்" என்றான்.

"யார் அந்த முத்து?" என்று சுந்தரேசன் கேட்டான்.

"இன்று பேசுகிறீர்களே, உலகத்திலே உள்ள கேடுகளைப்போக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு உழைக்கிறாராமே; அவர்தான்"

"யார், பாரிஸ்டர் முத்துவா? போனவாரம் கூட அருமையான பிரசங்கம் செய்தார்"

"பெண்களிடம் அதைவிட அருமையாகப் பேசுவார். அதிலும் என்னைப் போன்ற பேதைகளிடம் அவருடைய வித்தை பூராவும் காட்டிவிடுவார்."

"விமலா! அவர் எப்படி உனக்குத் தெரியும்?"

"என் வாலிபப் பருவ சேஷ்டையின் மூலம் நான் அவரைத் தெரிந்துகொண்டேன்" என்று கூறிவிட்டு, விமலா, தன் வரலாற்றைக் கூற ஆரம்பித்தாள்.

* * *

ஒரு நாள் மாலை, கமலா என் அக்கா கட்டிலின் மீது படுத்துக்கொண்டே,

"என்னடி என்னை மருவிச்சுகித்த
குகன் வாராத காரணம்"

என்ற பாட்டை இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தாள். என்னைவிடக் கமலா, ஒரு பிடி உயரம். நல்ல அழகு. இராகம் பல்லவிகூடப் பாடத் தெரியும், ஆனால் அவள் பாடிக் கொண்டிருந்த பாட்டு வாத்தியார் சொல்லிக்கொடுத்தது அல்ல. வாத்தியார் அப்போது 'நகுமோமு' சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தார். அக்கா பாடியபாட்டு, வாத்தியாரின் மகன், முருகன்-இப்போது முருக பாகவதர் என்று நாடகமாடுகிறாரே அவர்தான் எழுதிக் கொடுத்தது. தெரிந்ததா விஷயம். வாத்தியாரிடம் கீர்த்தனையும், முருகனிடம் சல்லாபமும் கற்றுக் கொண்டாள் என் அக்கா. இது மிக இரகசியம். எனக்கு ஜாடைமாடையாகக்கொஞ்சம் தெரியும். எங்கள் அம்மா, ரொம்பக்கண்டிப்பான பேர்வழி. குடும்பம் பிரபல்யமானது. எங்களுக்கு, ஆட்டுப்பாட்டு சொல்லி வைத்து, பெரியமனிதர் சாவகாசம் கிடைக்கும்படி செய்து மதிப்பாக இருக்கும்படி செய்ய வேண்டுமென்பது அம்மாவின் ஆசை. அதிலே என்ன தப்பு? மாடு வைத்துக்கொண்டிருப்பவனுக்கு, அதற்கு போடும் மூக்கணாங்கயிறு அழகாக இருக்க வேண்டும், சதங்கை கட்ட வேண்டும். கொம்புக்கு வர்ணம் பூசிக் கெஜ்ஜை கட்ட வேண்டும் என்று தோன்றுகிறது போல, யாராருக்கு எது எது வாழ்க்கை என்று தோன்றுகிறதோ அதிலே தானே "மேன்மை" அடைய வேண்டுமெனத் தோன்றும்! பணமும் இருந்தது. எனவே பாட்டும் ஆட்டும், நடந்தது. அக்காவுக்கு நல்ல பருவம். நான் தாவணி போட்டுக்கொண்டு உலவுவேன். அக்காவுக்கு என் மீது பிரியம். எனக்கும் அப்படித்தான். இருந்தாலும் முருகனிடம் அக்கா பேசும்போது கவனித்தேன். ஏதோ விஷயம் நடக்கிறது என்று தெரிந்தது. எனக்குக் கோபந்தான். நாங்கள் கொடுக்கிற 10 ரூபாய் போல, வேறு இரண்டு இடத்திலே பணம் கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு பாட்டுவாத்தியார் காலட்சேபம் செய்பவர். அவருடைய மகன், அக்கா மீது சொக்குப்பொடி போட்டுவிடுகிறானே என்று கோபந்தான். அம்மாவிடம், பல சீமான்களிடமிருந்து ஆட்கள் வருவார்கள், கமலாவைப் பற்றி விசாரிக்க. எங்கள் கோயில் குருக்களை, குங்குமம் மஞ்சள் பூ எடுத்துக்கொண்டு வாரத்துக்கொரு முறை வருவார். வரும்போதெல்லாம், ஏதாவதொரு சேதிகொண்டு வருவார் "என்னம்மா, ஆண்டவன் விட்ட வழியாகிறது. ஸ்வாமி, தழுந்தைக்கு 'முதநிலை' முடியட்டுமே பார்ப்போம். நேற்றுக் கூட நெடுங்காடியூர் ஜமீன்தாரர், கேட்டு அனுப்பினார்கள்" என்று என் தாயார் சொல்லி அனுப்புவதுண்டு. நான் கேட்டு இருக்கிறேன். எனவே இவ்வளவு பெரிய மனிதர்கள் தேடி அலையும் அக்கா, பாட்டுப்பாடிப் பிழைக்கும் முருகனிடம் ஒரு மாதிரியாக நடப்பது கண்டு எனக்குக் கோபந்தான். நான் சொன்னேனே நான் சின்னப் பெண், அக்காவின் மனம் அந்தக்காலத்திலே என்னபாடு படும் என்பது பிறகு நான் முத்து மீது ஆசை கொண்ட பின்னர் தான் எனக்குத் தெரியும்."

(தொடரும்)

## மறைவு

இந்தி எதிர்ப்புப் போரில் சிறையில் உயிர்நீத்த தோழர் தாலமுத்துவின் தந்தையார் தோழர் மா. வேல்முருகன் அவர்கள் சிலமாத காலமாக நோய்வாய்ப்பட்டு தமது 72-வது வயதில் (12 3 48-ல்) இயற்கை எய்தினார்.

* * *

சின்ன சேலம், "திராவிடநாடு" ஏஜண்டாக இருந்த தோழர் V. அய்யாசாமி அவர்கள் திடீரெனக் காலரா நோய்கண்டு, காலமானார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## புதிய கருத்துள்ள நூல்கள்.

ரூபா 10 மணியார்டர் அனுப்புவோருக்குத் தபால் செலவின்றி 17 புத்தகங்கள் அனுப்பப்படும்.

1. கவிஞனின் காதல் (காவியம்) தமிழ் ஒளி 0 12
2. கவிஞர் விழா "தமிழ் ஒளி" 0 6
3. இந்தியாவில சோஷலிஸம் 0 12
4. தமிழரின் மறுமலர்ச்சி 0 8 (C. N. A.)
5. அண்ணாவும், இராவண காவியமும் 0 2
6. இந்து மதம் — தமிழர் மதமா? 0 8 (ஈழத்து அடிகள்)
7. பெண்கள் உலகம்— அன்றும் இன்றும் 0 12
8. ஏ, தாழ்ந்த தமிழகமே 0 8 (C. N. A.)
9. எது இசை? (பாரதி தாசன்) 0 6
10. தமிழ் விளக்கம் (கேள்வியும்-பதிலும்) 0 6
11. தமிழ்க் கடவுளுக்கு ஆரியப் பாடலா? 0 4
12. தமிழ் ஆராய்ச்சி 0 6
13. ஆரிய வேதங்கள் 0 10
14. திராவிடர் நாகரிகம் 0 10
15. மரணத்தின் பின்? 0 8
16. மனிதன் எப்படித் தோன்றினான்? 0 8
17. தேன்கூடு (கவிதைகள்) 0 2

முத்தமிழ் நிலையம்,
75, வாதாமுத்தியப்பன் தெரு,
சென்னை—1.

சென்ற வாரத்தொடர்ச்சி

# கதிர்காமம்— ஒரு விளக்கம்

[ஈழத்தடிகள்]

இன்னும் ஒரு புதுமையும் கதிர்காமத்தில் நடைபெறுகின்றது. அது என்னவென்றால், கதிர்காமக் கடவுளுக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் மான்கறி படைப்பதுண்டு. அதாவது, புலவு, பிரியாணிபோலக் கறியும் சோறும் கலந்து படைப்பது வழக்கம். அந்தப்படையலைப்பிரசாதமாக அங்கு நிற்பவர் அனைவர்க்கும் பூசாரி வழங்குவான் அந்தப் படையலில் மான்கறி கலந்திருக்கின்றதென்ற காரணத்துக்காக, அதனை எவரும் வாங்கி உண்ண மறுக்கக் கூடாதென்பது அதுபற்றிய கட்டுப்பாடாக இருந்தது. மான்கறி கலந்த படையல் சோற்றை வாங்க மறுப்பவர்கட்குப் பலவித இன்னல்கள் உண்டாகும் என்ற அச்சுறுத்தலும் பலமாக இருந்தது. நான் அந்த நாட்களில் மாமிசஉணவை உண்ணும் பழக்கத்தை மேற்கொள்ளாதிருந்ததால், பூசாரியால் கொடுக்கப்பட்ட மான்கறி கலந்த (பிரசாதத்தை) சோற்றை வாங்க மறுத்துவிட்டேன். நான் அதை வாங்க மறுத்ததைப் பார்த்துக்கொண்டு என்பக்கத்தில் நின்ற பக்தர் ஒருவர் என்னை ஒரு பார்வை பார்த்தார். அந்தப்பார்வை, "நீ பகவானின் பிரசாதத்தை வாங்க மறுத்தாய்! உனக்கு என்ன நேரிடும் என்பதைப்பார்" என்று கூறுவது போல இருந்தது. ஆனால் அதை வாங்க மறுத்ததால் எனக்கு ஒன்றுமே நேரிடவில்லை. கையும் முடங்கவில்லை; வாயும் கோணவில்லை இந்த நிகழ்ச்சியை அப்போது என்னோடு கதிர்காமத்துக்கு வந்திருந்த, "ஞான சூரியன்" ஆசிரியரும் எனது நண்பருமான சிவானந்த சரசுவதி அவர்களிடம் கூறினேன். அவர் இதனைக் கேட்டதும் நகைத்தார். அந்த நகைப்பு, நான் அந்தப் பிரசாதத்தை வாங்க மறுத்தது தவறு என்று கூறுவது போலவும், அதனை வாங்க மறுத்ததால் ஒன்றும் முழுகிப் போய்விடாது என்று கூறுவது போலவும் இரு கருத்துக்களை ஓர் சமயத்தில் வெளியிடுவது போலக் காணப்பட்டது.

இனிக், கதிர்காமத்தைப் பற்றிய சில உண்மை விளக்கங்களைக் கூறி இதனை முடித்துக்கொள்கிறேன்.

கதிர்காமம் என்பது இலங்கையில் தென்கோடியில் உள்ள இடத்துக்கு ஏற்பட்ட பெயர். அந்த இடம் ஒரு பெருங்காட்டின் நடுவே உள்ளது. அந்த இடத்துக்குப் பத்துக்கல் தொலைவில்தான் மக்கள் வாழும் ஊர்கள் உள்ளன. அந்த இடத்துக்குப் போவதற்கு இரண்டு பாதைகள் உள்ளன. ஒன்று:—காடு முரடான ஒற்றை அடிப் பாதை; இது திசைமாருமை என்ற ஊரில் இருந்து போவது. இன்னொன்று:—மாட்டு வண்டி; மோட்டார் முதலியன செல்லக்கூடிய விசாலமான பாதை; பதுளை, (Badulla) பண்டாரவளை (Bandarawella) வழியாகப் போவது. இன்னும் ஓரிரு குறுக்கு வழிகளும் உள்ளன. அவற்றில் மக்கள் அதிகமான போக்குவரத்து வைத்துக் கொள்வதில்லை. கதிர்காமம் என்ற இடத்தில் சுப்பிரமணியர் கோயில் ஒன்றும், வள்ளி—தெய்வயானை கோயில்கள் தனித் தனியாக ஒவ்வொன்றும், ஒருபுத்தர் கோயிலும், ஒரு இஸ்லாமியரின் சமாதியும், வேறு இரண்டொரு சமாதிகளும் உள்ளன. இவற்றோடு, அங்கு செல்பவர்கள் தங்குவதற்காகக் கட்டப்பட்ட சத்திரங்கள் சிலவும் உள்ளன. சுப்பிரமணியர் கோயிலுக்கும் வள்ளியம்மன் கோயிலுக்கும் பூசை செய்கின்றவர்கள், வேடுவர் குலம் என்று சொல்லிக்கொள்ளும் நாலைந்து சிங்களவர் குடும்பங்களும், தெய்வயானை கோயிலுக்குப் பூசை செய்கின்ற வடநாட்டுச் சாமியார் ஒருவரும், இரண்டொரு புத்த பிட்சுகளும், இரண்டொரு இஸ்லாமிய மதத் தலைவர்களுமே அங்கு நிலையாக எப்போதும் இருப்பவர்கள். மற்றும் ஒரு சிலர் அங்குள்ள சத்திரங்களைக் காத்திருப்பவர். இவர்கள் எல்லாரும் சேர்ந்த எண்ணிக்கை இருபது அல்லது இருபத்தைந்து பேருக்கு மேற்படாது. இவர்களைத் தவிர வேறு எவரும் நிலையாக அங்கே இருப்பதில்லை. நிலையான குடியிருப்புக்குரிய வசதிகளும் அங்கு கிடையாது. அதோடு அந்தப் பகுதி, காட்டுக் காய்ச்சலுக்கு (மலேரியா) பேர் வாய்ந்தது. திருவிழாக் காலங்களில் அங்கு போய்ச்சிலநாள் தங்குபவர்களையே அந்தப் பகுதிக் காட்டுக் காய்ச்சல் பெரிதும் ஆவலோடு வரவேற்றுத்தனது விருந்தாளிகளாக்கிக் கொள்ளும் என்றால், அங்குநிலையாக இருப்பவர்களின் நிலை என்னாகும் என்று கூறத்தேவையில்லை. அங்கு நிலையாக இருக்கும் ஒரு சிலர்கூட எப்போதுமே அங்கு இருப்பதில்லை. பலநாட்கள் வெளியூர்களிலேயே தங்குவார்கள். என்றாலும் அவ்வப்போது அங்கு வருவதும் போவதுமாகவே இருப்பார்கள்.

இனிக், கதிர்காமத்தில் ஆடித்திங்களில்ஒருதிருவிழாவும், கார்த்திகைத் திங்களில் ஒரு திருவிழாவும் நடைபெறுகின்றது ஆடித்திருவிழாவுக்கு பல ஆயிரக்கணக்கிலும், கார்த்திகைத் திருவிழாவுக்கு ஒரு சிலநூற்றுக் கணக்கிலுமே மக்கள் கூடுவர். இதுவன்றி, இத்தமிழ் நாட்டில் உள்ள சுப்பிரமணியர் கோயில்களில் ஐப்பசித் திங்களில் நடைபெறும் சூரன்போர்த் திருவிழாவும் இப்போது சிலகாலமாகக் கதிர்காமத்திலும் நடைபெறுகின்றது. ஆனால் இப்போர் விழாவுக்கு மக்கள் அதிகம் போவதில்லை. காரணம்: சூரன் போர் விழா, கதிர்காமத்தில் நடைபெறுவதைப் பார்க்கிலும் மிகுதியான ஆடம்பரங்களுடன் வேறு பல இடங்களில் நடைபெறுவதேயாகும்.

இனிக், கதிர்காமக்கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு ஆறு ஓடுகின்றது. அதன் பெயர் மாணிக்க கங்கை என்பது. அந்த ஆற்றில் பச்சை, சிவப்பு, நீலம் முதலான விலை உயர்ந்தகற்கள் கிடைப்பதால் அதற்கு மாணிக்க கங்கை என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. விலை உயர்ந்த கற்கள் கிடைப்பதால் அந்த ஆறு மாணிக்ககங்கை என்று அழைக்கப்படுவது போலவே, இலங்கையில் உள்ள இன்னொரு இடமும், இரத்தினக் கற்கள் மிகுதியாகக் கிடைக்கின்ற காரணத்தால் இரத்தினபுரி என்று அழைக்கப்படுகின்றது. பொதுவாகவே இலங்கைக்கு ஈழநாடு என்ற சிறப்புப் பெயர் உண்டு. ஈழம் என்றால் பொன் என்று பொருள். ஈழநாடு —பொன்னாடு. இலங்கையைப்பற்றிய வரலாறுகளைக்குறிக்கும் பழைய இலக்கியங்கள் எல்லாம், இலங்கையின்பெயரை ஈழம் என்றே பேசப்படுவதைக்காணலாம். என்ற இந்த அளவோடு இலங்கையிலுள்ள கதிர்காமத்தைப்பற்றிய விளக்கத்தை முடித்துக்கொள்கிறேன்.

✱

# ஐம்பதாண்டுகளுக்குப் பின்!

நம்முடைய மக்களும், நம்முடைய பின்சந்ததியாரும் எந்தவிதமான உலகத்தைக் காணப்போகிறார்கள்?

நம்முடைய வாழ்நாளிலேயே எவ்வளவு அதிசயமான முன்னேற்றங்களைக் காணப்போகிறோம்?

இன்னும் 50, வருஷங்களுக்குப் பின்னால் உலகம் எந்த மாதிரியான மாறுதல் அடையப் போகின்றது?

வருங்கால உலக நிலைமை நிகரமாக நிர்ணயிப்பது என்பது சிலர் நினைக்கின்றபடி அவ்வளவு சிரமமான காரியமல்ல.

மனித முன்னேற்றம் என்பது இன்ன இன்ன விதமாகத்தான் இருக்குமென்பதைச் சுலபத்தில் அளவெடுத்து விடலாம்.

உலகம் இதுவரை எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கின்றதோ, அந்த விகிதத்துக்குச் சிறிது அதிக வேகமாகவேசெல்லும். பகுத்தறிவை உபயோகித்து நல்ல யோசனையுடன் சென்ற 40 வருஷத்திய முன்னேற்றத்தைப் பார்த்தோமானால், பிந்திய 50 வருஷத்தில் உலகம எப்படி இருக்கும என்று கண்டுபிடிப்பது கஷ்டமான காரியமல்ல.

இன்று மின்சாரவிளக்கின் அதிசயத்தைப் பார்த்து, இந்த நாகரிகமான காலத்தில் நாம் இருக்கிறோமே என்று மகிழ்ச்சி அடைந்து, நமமை நாமே பாராட்டிக் கொள்ளுகிறோம். ஆயினுங்கூட மின்சார சக்தியின் 100—ல் 5-பாகத்தைத்தான் நாமகண்டிருக்கின்றோமே தவிர இன்னும் 95 பாக சக்தியின் பயனைநாம உணராமலும் அநுபவிக்காமலும இருந்து வருகின்றோம். மின்சாரத்துககாக நாம் செலவு செய்யுந்தொகை 100 ரூபாயானால் அதில் 5-ரூபாயின் பலனை மாத்திரம் அநுபவித்துக் கொண்டு 95 ரூபாய் பலனை அநுபவிக்காமல் விட்டுவிடுகிறோம்.

100-க்கு 100-விகித சக்தி.

இன்னும் 50 வருஷ காலத்திற்குப்பின் இந்த உலகம் எப்படி மாறுதலை அடையப்போகின்றது என்றால் மின்சாரத்தின் பலனை அநுபவிப்பதில் 100க்கு 100 பாகம் அநுபவிக்க முடியாவிட்டாலும், கிட்டத்தட்ட 80, 90 பாகத்துககு நெருங்கி விடக்கூடும். ஆகவே 100க்கு 5-பங்கு அநுபவிக்கும் போதே நமக்கு இவ்வளவு சௌகரியமும் சந்தோஷமும் இருக்குமானால் 80, 90 பங்கு அநுபவிக்கும்போது நாம் எவ்வளவு சௌகரியமும், சுகமும், சந்தோஷமும் அடையக்கூடும என்பது விளங்கும். மனிதனுடைய முன்னேற்றம் என்பது ஒரு மனிதன் எவ்வளவுக்கு எவ்வளவு வேகமாகப் போக வேண்டுமென்று ஆசைப்படுகின்றானோ, அந்த உத்வேகத்தைப் பொறுத்தே வாழ்க்கைச் சுகமும் உண்டாகக்கூடியதாகும்.

உதாரணமாக யந்திர சக்தியை உணர்ந்து அதனை அடிமைகொண்ட எதிர்கால மனிதன் அதன் பயனை அடைந்து மணிக்கு நூற்றுக்கணக்கானமைல் வேகத்தில் செல்லக்கூடிய நிலையில் இருந்து கொண்டு நமது இன்றைய நிலையைப்பார்ப்பானேயானால், வாழ்க்கையில் எவ்வளவோ காலம வீணாகி விட்டதே என்று துக்கப்படுவான.

மூடுபனியினாலும் கெட்ட சீதோஷ்ண நிலையினாலும் பல லட்சக் கணக்கான பவுன்களும் ஆயிரக் கணக்கான மணிநேரங்களும் வீணாகின்றது என்பதையும், போக்குவரததுகளில் ஏற்படும் தடைகளினால் விளையும் தாமதங்களின் தொல்லைகளையும் நினைத்துப் பார்த்தால் நமக்கு எவ்வளவு காலம், எவ்வளவு பணம வீணாகின்றது என்பது விளங்கும.

ஆனால் நமக்குப் பிற்காலத்தில் வரும சந்ததியார்கள் இநதத்தொல்லைகளையும், நஷ்டங்களையும் எல்லாம் தாண்டி இவற்றையெல்லாம் மாற்றி விடுவார்கள்.

மூடுபனியென்பது ஒருபழங்கதையாகிவிடும். சீதோஷ்ண ஸ்திதி, தண்ணீர்க்குழாயில் தண்ணீர் எடுத்துக் கொள்ளுவது போல் சரிப்படுத்திக் கொள்ளப்படும்.

இன்னும் சிறிது காலத்திற்குள்ளாகவே தெருக்களில் சூரியனுக்கு நிகரான பிரம்மாண்டமான விளக்குகள் பிரகாசிக்கும். இப்போது ஆகாயவிமானம் இறங்குவதற்குத் தனியாகப் பெரியமைதானம் வேண்டியிருக்கிறது. இந்த மைதானம் வருங்காலத்தில் தேவையில்லை. வீட்டின் கூரைகள் யாவும் பெரியமைதானம் போல் செய்யப்பட்டுவிடும். அவரவர்களுக்குச் சொந்தமான ஆகாய விமானங்களை அவரவர்களின் வீட்டுக்கூரையில் இறக்கிக்கொள்ளும்படியான வசதிகள் ஏற்பட்டுவிடும்.

பாதாள நகரங்கள், பிரம்மாண்டமான குழாய்களின் மத்தியில் ஸ்தாபிக்கப்படும். இந்த நகரங்கள்பட்டப்

(2-ம் பக்கம் பார்க்க)

## கல்லூரிகளில் மதபோதனை

3-ம் பக்கத் தொடர்ச்சி

சேர்வது என்ற நிலைக்கு வரும்படி அத்தொழிலை விட்டுவிடக் கூடாது. அவர்களது வாழ்க்கைப்பாரம் அவர்களை அதிகம் நசுக்கும்படியான நிலைமையில் வைக்கக்கூடாது. அவர்கள் செய்யும் மிக உபயோகமான வேலைக்குத் தக்கவாறு திருப்திகரமான சம்பளம் கொடுக்கப்படவேண்டும். அவர்களது அந்தஸ்தையும், எதிர்கால முன்னேற்றத்தையும் குறித்து அவர்களுக்கு நியாயமான முறையில் உறுதியளிக்கப்பட வேண்டும். ஆனால் நம் நாட்டிலும் பிற இடங்களிலும் நாம் காண்பதென்ன? உபாத்தியாயர்களுக்கு மிக மோசமாகவே சம்பளம் அளிக்கப்படுகிறது; அவர்களுக்கு அடுத்தபடியாக இருக்கும்மேலதிகாரிகளுடைய விருப்பத்தையே எதிர்நோக்கி நிற்க வேண்டியிருக்கிறது. இம்மாதிரி நிலைமையில் நல்ல வேலையை இவர்களிடம் எதிர்பார்க்க இயலாது.

உபாத்தியாயர்களின் சம்பளங்களைக் குறைக்க வேண்டுமென்ற ஆசையை நமது பொருளாதார அதிகாரிகள் எதிர்க்கும்படி பொது ஜன அபிப்பிராயம் கவனித்துக் கொள்ள வேண்டும்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi Street. Conjeeveram.